## சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை

## சுற்றுலா

## கொள்கை விளக்கக் குறிப்பு – 2009–2010

சமூகப் பொருளாதார வளர்ச்சியில் சுற்றுலாவின் பங்கு முதன்மையானது. "உலகச் சிற்றூர்" எனும் கோட்பாட்டின் ஓர் உறுப்பாக சுற்றுலா திகழ்வதால் இது உலகளவில் கருத்தொருமிப்பிற்கு அடிகோலுகிறது. சுற்றுலாப் பயணிகள் முழுமையான அனுபவத்தை உய்க்க விரும்புகின்றனர். இதனை வரலாற்றுச் சிறப்புமிக்க நினைவுச் சின்னங்கள், நினைவகங்கள், பண்பாடு ஆகியவற்றைப் பற்றி தெரிந்து கொள்வதன் மூலம் அடைய முடிகிறது. கேளிக்கை, விளையாட்டு, நடனம், இசை, விழாக்கள், சாகசம், உணவு, கல்வி, உடல் நலம் மற்றும் வணிகம் ஆகியன இந்த அனுபவத்தை உய்க்க உதவுகின்றன. போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி போன்றவற்றால் சுற்றுலாவின் தேவை அதற்கேற்ப அதிகரித்துள்ளது.

### 1 சுற்றுலா – பொருள் விளக்கம்

1.1 மனமகிழ்ச்சி அல்லது பொழுதுபோக்கிற்காகவும், ஓய்விற்காகவும் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மேற்கொள்ளப்படும் பயணம் **'சுற்றுலா'** எனப்படும். தான் வாழ்ந்து வரும் சூழலிலிருந்து வெளியே சென்று ஓய்வு, தொழில் போன்ற காரணங்களுக்காக ஓராண்டிற்கும் மேலாக அவ்விடத்தில் வருமானம் ஈட்டுகிற செயலுடன் தொடர்பற்ற பிற நோக்கங்களுக்காக செயல்படுபவர் <u>சுற்றுலாப்பயணி</u> என <u>உலக சுற்றுலா நிறுவனம்</u> விவரித்துள்ளது. சுற்றுலா உலகளாவிய ஓய்வு உய்யும் நிகழ்வாக ஆகியுள்ளது.*

**1.2** சுற்றுலா சார்ந்த தொழிலில் பொருள் மற்றும் சேவையைக் கொண்டு பெரும் முதலீட்டவும், சுற்றுலாத் தொழில் மூலம் வேலை வாய்ப்பு அதிகரிப்பதை முன்னிட்டும், சுற்றுலா, உலகின் பல நாடுகளிலும், குறிப்பாக தீவுப் பிரதேசங்களிலும் மிகவும் முக்கியமாகிவிட்டது. சுற்றுலாத் தொழிலில் சுற்றுலாக் கப்பல்கள், வாடகைச் சீருந்துகள் முதலியன போக்குவரத்து சேவைகளாகவும், விடுதிகள், ஓய்வு இல்லங்கள் மற்றும் கேளிக்கை இடங்கள் முதலியன தங்குமிட சேவைகளாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.*

1.3 பொருளாதார வள வாய்ப்பைப் பெற்றுள்ளதாகக் கருதப்படுகிற துறைகளுள் சுற்றுலாத்துறையும் ஒன்றாகும். கீழ்க்காணும் காரணங்களால் சுற்றுலா, முன்னுரிமை துறையாக கருதப்படுகிறது.

- இந்தியாவின் மேம்பாட்டில் இயற்கை, மனித வளம், பண்பாடு, தொழில் நுட்பம் மற்றும் சீரான வளர்ச்சி ஆகியவற்றில் அதிகமான பங்களிப்பை அளிப்பது.
- இது தொழிலாளர் சார்ந்தது. குடிசை அல்லது சிறு தொழில் சார்ந்தது. உயர் ரக வேலைவாய்ப்பை அளித்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வல்லது.
- குறைந்த முதலீட்டில் கிராமப்புரங்களில் வளர்ச்சித்திட்டங்களை ஏற்படுத்த வல்லது.**
- இது முன்னேறிய மற்றும் பின்தங்கிய பொருளாதார இணைப்புகளைக் கொண்டுள்ளது. அது, ஒட்டுமொத்த வருமானம், வேலைவாய்ப்பு (குறிப்பாக மகளிர், இளைஞர் மற்றும் உடலூனமுற்ற நபர்களுக்கு சமூகத்தில் சம உரிமையையும், சமூக

* இணையதளம்:இஎன்.விகிபீடியா.ஓஆஜி/விகி/டூரிசம் ** மைய அரசு சுற்றுலா அமைச்சகத்தின் 2002 ஆம் ஆண்டு தேசிய சுற்றுலா கொள்கை

நீதியையும் பெருமளவில் அளிக்கிறது), முதலீடு ஆகியவற்றை உருவாக்குகிறது. மத்திய, மாநில அரசுகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் வருவாயைப் பெருக்குகிறது.

- ஓர் ஏற்றுமதி தொழிலாக, அந்நியச் செலாவணியை குறிப்பிடத்தக்க அளவுக்கு வழங்க முடிகிறது மற்றும்
- புரிந்துணர்வு, அமைதி ஆகியவற்றை மேம்படுத்த முடிகிறது. தேசிய ஒற்றுமைக்கும், வட்டார உறுதித்தன்மைக்கும் பங்காற்ற முடிகிறது.

## 2 சுற்றுலா – ஒரு கண்ணோட்டம்

2.1 சுற்றுலா குறித்த செலவு, அதன் தகைசால் பண்புக்கூறுகளுடன், பரந்த எல்லையுடன் கூடிய பலவகையான பயன்களை அளிக்கிறது. பல வகையான பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு தேவை அதிகரிப்பதுடன், வறுமையைத் தணிப்பதற்கு, ஆதரவான வருமான வளர்ச்சியைக் கொண்டுள்ள வேளாண்மை, தோட்டக்கலை, கோழியின வளர்ப்பு, கைத்திறப் பொருட்கள், போக்குவரத்து, கட்டுமானம் போன்ற எண்ணற்ற துறைகளில் மிகையான ஆற்றலைப் பயன்படுத்துவதற்கான வளவாய்ப்பை, சுற்றுலா அளிக்கிறது.***

2.2 சுற்றுச்சூழல், சீரான பண்பாடு மற்றும் சமூக மேம்பாடு ஆகியவற்றை கருத்தில் கொண்டு சுற்றுலா குழுமம் சுற்றுலாவின் வளர்ச்சியைப் பேணுகிறது. இது பின்வருபவற்றில் பிரதிபலிக்கிறது.

அ. சுற்றுலாப் பயணிகள் தங்கும் நாட்களை அதிகரிக்கிறது
ஆ. வருமானம் மற்றும் சுற்றுலாவினால் கிடைக்கும் பயன்கள் பகிர்ந்தளிப்பு மற்றும்;
இ. இயற்கையாகவும், பண்பாட்டு சின்னமாகவும் உள்ள இடங்களின் நிருவாகத்தை மேம்படுத்துகிறது.

***மத்திய அரசு சுற்றுலாத்துறை ஆண்டறிகை 2007-08



**இதனால் விளையும் பயன்கள்**

அ. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலா வட்டங்களிலுள்ள இடங்களில் தரம் வாய்ந்த ஒருங்கிணைந்த சுற்றுலா கட்டமைப்பு வசதிகள்

ஆ. மேம்படுத்தப்பட்ட இணைப்புச்சாலை, உயர்தர சுற்றுச்சூழல், சுற்றுலா சேவைகள்

இ. பல்வேறு நிறுவனங்களின் ஒருங்கிணைந்த முயற்சியால் நிறுவன அமைப்பும், முறைப்படுத்துதலும் மேம்பாடடையச் செய்தல்

ஈ. சுற்றுச்சூழல் பண்பாட்டைப் பேணுதல் மூலம் சமூக ஒருங்கிணைப்பு சுற்றுலா வளர்ச்சியை மேம்பாடடையச் செய்தல்

உ. சுற்றுலாவில் தனியார் துறை மற்றும் சமுதாய பங்கேற்பை ஊக்குவித்தல் மற்றும்

ஊ. வேலைவாய்ப்பை உருவாக்குதல், வறுமை ஒழித்தல், சுற்றுச்சூழல் சீரமைப்பு, மகளிர் மற்றும் பின் தங்கிய பிரிவுகளின் முன்னேற்றம் ஆகியவை மூலம், சீரான சுற்றுலா வளர்ச்சி மற்றும் சுற்றுலாத் தல நிர்வாகத்திற்கென பயிற்சி மற்றும் மனித வள மேம்பாடு திட்டங்கள் செயல்படுத்துதல்.****

## 3 தமிழ்நாட்டில் சுற்றுலாவின் களம்

3.1 தமிழ்நாடு, பல்வகையான சுற்றுலாச் சிறப்பியல்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ள மாநிலம். தமிழ்நாட்டில் நீல மலைகள், பசுமைப் புல்வெளிகள், மணற்பாங்கான கடற்கரைகள், மாபெரும் நினைவகங்கள், வியப்பூட்டும் கோயில்கள், விந்தையான வனவிலங்குகள், களிப்பூட்டும் சிலைகள் கிராமிய வாழ்க்கை முறை ஆகியன உள்ளன. மேலும், இங்கு, மனதில் நிற்கும் சுற்றுலாத்தலங்கள், தொடர்ந்து கடைபிடிக்கப்படும் கலாச்சார சங்கமம் மற்றும் இயற்கையோடு இயைந்த சிறப்பம்சங்கள் உள்ளன.

**** ஆசிய வளர்ச்சி வங்கி சுற்றுலா உள்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டத்தின் இடைக்கால அறிக்கை

3.2 தமிழ்நாட்டில், உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, ஏலகிரி, ஜவ்வாது மலை, கொல்லி மலை, சிறுமலை, வால்பாறை, டாப் சிலிப், பர்வதமலை மற்றும் பச்சமலை ஆகிய மலை வாழிடங்களும், குற்றாலம், ஒகேனக்கல், திற்பரப்பு, குரங்கு அருவி, திருமூர்த்தி மலை, ஆகாச கங்கை மற்றும் பாபநாசம் போன்ற வெள்ளி அருவிகளும், கிண்டி தேசிய பூங்கா மற்றும் ஆனைமலை தேசிய பூங்கா போன்றவையும், முதுமலை, கோடியக்கரை, களக்காடு, முண்டந்துரை மற்றும் பேரிஜம் ஆகிய சிறந்த வனவிலங்கு சரணாலயங்களும், உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் கோயம்புத்தூரில் தாவரவியல் பூங்காக்களும் உள்ளன. தஞ்சாவூரில் உள்ள சோழர் கால கோயில்கள், தாராசுரம், கங்கைகொண்ட சோழபுரம், மாமல்லபுர புராதனச் சின்னங்கள், நீலகிரி மலை ரயில் ஆகியன தமிழ்நாட்டில் யுனெஸ்கோ அறிவித்த நினைவுச் சின்னங்களாகும். மெய்சிலிர்க்கும் மெரினா, எழிலான எலியட்ஸ், தித்திக்கும் திருவான்மியூர், திருச்செந்தூர், இராமேசுவரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய கடற்கரைகளுடன் தமிழ்நாடு மிக நீண்ட கடற்கரையைக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டின் கோயில்கள் தெய்வீகத்தையும் இசையையும் பறைசாற்றுகின்றன. மதுரை, இராமேசுவரம், கும்பகோணம், சிதம்பரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் எண்ணற்ற கோயில்கள் அமைந்துள்ளன. நேர்த்தியாக வடிக்கப்பட்ட பேரழகு வாய்ந்த சிற்பங்கள் கலைநயச் சிறப்பையும், கலாச்சார சீர்மையையும் பிரதிபலிக்கின்றன.

3.3 தமிழ்நாடு தனித்தன்மை வாய்ந்த கலாச்சாரத்தையும், எண்ணற்ற சுற்றுலா வளவாய்ப்புக்களையும் கொண்டிருப்பதால், மேலைநாடு மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் ஆண்டு முழுவதும் இங்குள்ள சுற்றுலாத்தலங்களுக்குத் திரண்டு வருகின்றனர். பருவ காலங்களில் சுற்றுலாத்தலங்களில் சுற்றுலாப்பயணிகள் நெரிசல் அதிகமாகி விடுகிறது. எனவே, தமிழ்நாடு சுற்றுலாத்துறை பொதுக்கழிப்பிடங்கள், இளைப்பாறும் இடங்கள், குடிநீர் வசதி, சாலை



மேம்பாடு, வாகன நிறுத்துமிடம் ஆகிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்த தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

## 4 தமிழ்நாடு சுற்றுலா

4.1 தலைமைச் செயலகத்தில் சுற்றுலா அமைச்சகம், அதன் கட்டுப்பாட்டில் சுற்றுலா இயக்குநரகம் என அமைந்து மாநிலத்தில் சுற்றுலா சார்ந்த கொள்கைகளை வகுப்பதிலும், சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதிலும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் புதிய வழிமுறைகளை முனைவதிலும், புதிய திட்டங்களைக் கண்டறிவதிலும் தனியார் துறைக்கு முன்மாதிரியாக உள்ளது. தமிழ்நாடு சுற்றுலா பிற அரசுத் துறைகள், முகவரமைப்புகள் மற்றும் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுகிறது.

4.2 தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தங்கும் விடுதிகள், இளைஞர் விடுதிகள், அகமகிழ் விடுதிகள், உணவகங்கள், சுற்றுலாத் திட்டங்கள், படகு இல்லங்கள், தொலைநோக்கி இல்லங்கள் என வர்த்தகத்தின் புதிய அம்சங்களை தனியார் துறைக்கு முன்னோடியாக இருந்து நடாத்தி வருகிறது.

4.3 அமைப்பு ரீதியான அட்டவணை:




4.4 சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் சுற்றுலா தகவல் மையங்கள் தமிழ்நாட்டில் 18 சுற்றுலா அலுவலகங்களும், வெளிமாநிலங்களில் ஆறு சுற்றுலா அலுவலகங்களும், 18 சுற்றுலா தகவல் மையங்கள் தமிழ்நாட்டிலும், ஆறு சுற்றுலா தகவல் மையங்கள் வெளிமாநிலங்களிலும் சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக செயல்பட்டு



வருகின்றன. சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் சுற்றுலா தகவல் மையங்களின் வரிசையை பிற்சேர்க்கையில் காணலாம்.

4.5 2008–09 ஆம் ஆண்டில், திருவண்ணாமலை, காரைக்குடி, வேலூார் மற்றும் கோயம்புத்தூார் ஆகிய இடங்களில் புதிய சுற்றுலா அலுவலகங்கள் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

## 5 தமிழ்நாடு சுற்றுலாவின் பங்கு

5.1 தனியார் முதலீட்டை ஈர்த்தல், மேம்பாடு மற்றும் சந்தைப்படுத்துதலுக்கான புதிய நெறிகளை, யுக்திகளை வலுப்படுத்துதல் மற்றும் அனுபவமிக்க மனித வளத்தை உருவாக்குதல் போன்றவற்றில் வளர்ச்சியைக் காண சுற்றுலாத்துறை இணைப்புப் பாலமாக இருந்து சுற்றுலா வளர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது. இவ்வகையில் சுற்றுலாத்துறை பின்வரும் முக்கிய பணிகளை செய்து வருகிறது.

அ. கொள்கை சம்பந்தப்பட்ட பணிகள்:
1. மேம்பாட்டுக் கொள்கைகள்
2. ஊக்க உதவித் தொகைகள்
3. மனித வள ஆற்றல் மேம்பாடு (பணியாளர்)
4. மேம்பாட்டு வழிமுறைகள்

ஆ. திட்டமிடல்

இ. முறைப்படுத்துதல்
1. தரங்கள்
2. வழிகாட்டுதல்கள்

ஈ. உள்கட்டமைப்பு மேம்பாடு:
1. மைய மற்றும் மாநில நிதியுதவி
2. சுற்றுலா பொருட்களை விநியோகித்தல்

உ. ஆராய்ச்சி, ஆய்வு, மேற்பார்வை மற்றும் மதிப்பீடு

ஊ. சட்டமன்றம் சார்ந்த பணி

எ. பணியமைப்பு விவகாரங்கள்

ஏ. கள அலுவலகப் பணிகளை ஆய்வு செய்தல்

ஐ. சீர்பெருமக்கள் பற்றிய குறிப்புகள்

ஒ. நிதி, வரவு– செலவுத் திட்ட ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு

ஓ. பொது நலன், குறைகள் மற்றும் மரபு

5.2 சுற்றுலா இயக்குநரகம் பின்வரும் பணிகளுக்கு பொறுப்பு வகிக்கிறது.

அ. கொள்கைகளை ஏற்படுத்துவதில் கள அலுவலகங்களிலிருந்து தகவல் பெற்று உதவுதல்

ஆ. திட்டங்கள் குறித்து மேற்பார்வை மற்றும் திட்டங்கள் மேற்கொள்வதில் உதவுதல்

இ. கள அலுவலகங்களின் செயல்பாடுகளில் ஒத்துழைப்பு மற்றும் மேற்பார்வை

ஈ. ஆய்வு மற்றும் தரக் கட்டுப்பாடு:

1. சுற்றுலா வழிகாட்டி
2. குறைகள் மற்றும் அதன் நிவர்த்தி

உ. உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு

1. ஊக்கத் தொகை வெளியிடுதல்
2. சுற்றுலா தகவல் மற்றும் வசதி
3. கள விளம்பரம், சந்தையியல் மற்றும் மேம்பாடு
4. விருந்தோம்பல் நிகழ்ச்சிகள்
5. கருத்தரங்குகள் மற்றும் கூட்டங்கள்

ஊ. மனித வள மேம்பாடு

1. நிறுவனங்கள்
2. தரங்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் அமைத்தல்

எ. விளம்பரம் மற்றும் மேம்பாடு

1. கோட்பாடு
2. விளம்பர திட்டம்
3. புதிய யுக்திகள்
4. ஒருங்கிணைப்பு
5. மேற்பார்வை

ஏ. சட்டமன்றம் சார்ந்த பணிகள்



ஐ. சுற்றுலா இயக்ககத்தின் மனித வள மேம்பாடு மற்றும் பணியமைப்பு சார்ந்த பணிகள்

## 6 2008–09 ஆம் ஆண்டில் முக்கிய நடவடிக்கைகள் மற்றும் சாதனைகள்

- அதிகம் அறிமுகமாகாத சுற்றுலாத் தலங்களை பிரபலப்படுத்துதல், தொழில் முனைவோருக்கு ஊக்க உதவித்தொகை அளித்தல்
- பாரம்பரியச் சிறப்புமிக்க கட்டிடங்களை, பாரம்பரிய விடுதிகளாக மாற்றுவதற்கு மானியம்
- ஊரகச் சுற்றுலாவிற்கு ஊக்கம்
- சுற்றுலாப் பயணிகளுடன் நட்பை மேம்படுத்தும் வகையில் "விருந்தினர் போற்றுதும்! விருந்தினர் போற்றுதும்!!" முகாம்கள்.
- விருந்தினர் மற்றும் விருந்தோம்புபவர் பொறுப்பை உணர்த்தும் "பொறுப்புணர்வு சுற்றுலா" மூலம் வலியுறுத்தி சுற்றுச்சூழலுக்கு பங்கமில்லா சுற்றுலாவை பேணுதல்
- மருத்துவ சுற்றுலா முயற்சிகளை வலுப்படுத்துதல்
- உணவுடன் உறையுள் திட்டம்
- பிற துறைகளின் நிதியை ஒருங்கிணைப்பதன் மூலம் சுற்றுலா வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்துதல்
- பல வண்ண நூல்கள், மடிப்பேடுகள், சுவரொட்டிகள், வண்ணமிகு நாட்காட்டி ஆகிய எண்ணற்ற சுற்றுலா வெளியீடுகள்
- கண்கவர் சுற்றுலா விளம்பரங்கள்
- அயல் நாடுகளில் நடைபெற்ற சுற்றுலாச் சந்தைகளில் பங்கேற்றல்
- உள்நாட்டில் விளம்பர முகாம்கள்
- திறம்பட்ட சந்தைப்படுத்தும் முனைவுகள்
- தமிழர் மரபு, பண்பாட்டை விழாக்கள் மூலமாக வெளிப்படுத்துதல்

- தமிழ்நாடு சுற்றுலா சேவையை இலக்கமயமாக்குதல்
- சுற்றுலா சேவையை பரந்த அடிப்படையில் கணினி மூலம் உடனடி பதிவு செய்தல்
- முக்கிய சுற்றுலாத்தலங்களில் நான்கு புதிய சுற்றுலா அலுவலகங்கள்
- நான்கு தேசிய சுற்றுலா விருதுகள் (2007ல் மூன்று, 2008ல் ஒன்று)
- ஹட்கோ மூலம் வரைவு சுற்றுலா பெருந்திட்டம்
- பொருட்காட்சி, கண்காட்சி, மாநாடு, கலந்தாய்வு போன்றவற்றை சந்தைப்படுத்துதல் – மூன்று வட்டார அளவு கருத்தரங்குகள் ( சுற்றுச்சூழல் சுற்றுலா ஆளுமை, மருத்துவ சுற்றுலா, சமூகப்பொறுப்புணரும் சுற்றுலா)
- 2008–09 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலாவின் நிதி ஒதுக்கீடு ரூ.62.04 இலட்சம்
- சுற்றுலாத் தலங்களை தூய்மைப்படுத்தும் முகாம்கள்
- தமிழ்நாடு சுற்றுலாவின் செயல்பாடுகள், நிகழ்வுகள் மற்றும் சேவைகள் அடங்கிய மாதாந்திர செய்திமடல்

## 7 இந்தியாவுக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை

7.1 வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் வருகையில் இந்தியாவின் பங்கு 2004 ஆம் ஆண்டு 0.46 விழுக்காட்டிலிருந்து 2007 ஆம் ஆண்டில் 0.56 விழுக்காடாக கணிசமாக அதிகரித்துள்ளது. இந்தியாவிற்கு வந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை 2004 ஆம் ஆண்டு 3.46 மில்லியனிலிருந்து 2007 ஆம் ஆண்டு 5.08 மில்லியனாக உயர்ந்துள்ளது. சுற்றுலா மூலம் வரும் அந்நியச் செலாவணி வருவாய் மிகவும் பங்களிப்பதாகும். இது, 2004 ஆம் ஆண்டு 6.17 பில்லியன் அமெரிக்க டாலரிலிருந்து (ரூ.27944 கோடி) 2007 ஆம் ஆண்டு 11.96 பில்லியன் அமெரிக்க டாலராக (ரூ.44360 கோடி) பெருகியுள்ளது. உலக நாடுகள் மத்தியில் சுற்றுலா மூலம் வரும் வருமானத்தில் இந்தியாவின் பங்கு 2004 ஆம் ஆண்டு 0.98 விழுக்காட்டிலிருந்து



2007 ஆம் ஆண்டு 1.25 விழுக்காடாக உயர்ந்துள்ளது. உள்நாட்டு சுற்றுலாவும் இந்தக் கால அளவில் குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்துள்ளது. இந்தியாவின் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை 2004 ஆம் ஆண்டு 366.23 மில்லியனிலிருந்து 2007 ஆம் ஆண்டு 526.57 மில்லியனாக அதிகரித்துள்ளது. *

### 7.2 தமிழ்நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை

7.2.1 அச்சு மற்றும் மின்னணு ஊடகங்கள் மூலமாக உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் தீவிர சுற்றுலா மேம்பாடு மற்றும் விளம்பரம் செய்ததாலும் மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டாலும் தமிழ்நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்துள்ளது. அதன் விவரம் கீழே அட்டவணையிடப்பட்டுள்ளது.

| ஆண்டு | உள்நாட்டு சுற்றுலா பயணிகள் | வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் | மொத்தம் | வளர்ச்சி விகிதம் விழுக்காடு |
|---|---|---|---|---|
| | (இலட்சத்தில்) | | | |
| 2005 | 323.39 | 11.79 | 335.18 | 7.7 |
| 2006 | 392.14 | 13.35 | 405.49 | 21.0 |
| 2007 | 506.47 | 17.53 | 524.00 | 29.2 |
| 2008 | 626.18 | 20.40 | 646.58 | 23.4 |

7.2.2 2007 ஆம் ஆண்டில் 524.00 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டிற்கு வருகை தந்துள்ளனர். 2008 ஆம் ஆண்டில் 646.58 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். இது இவ்விரண்டு ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகள் புள்ளி விவரத்துடன் ஒப்பிடும் போது 2008 ஆம் ஆண்டின் வருகை 122.58 இலட்சம் அதிகமாகும்.

*மைய சுற்றுலாத்துறையின் (புள்ளியியல்) ஆண்டுமலர்

7.3 தமிழ் நாட்டில், சராசரியாக 4 முதல் 5 நாட்கள் உள் நாட்டுப்பயணியும், 7 நாட்கள் வரை வெளிநாட்டுப் பயணியும் தங்குகிறார்கள். ஒரு வெளிநாட்டுப்பயணி நாள் ஒன்றுக்கு சராசரியாக ரூ.4,396/– செலவழிக்கிறார். உள்நாட்டுப்பயணி நாள் ஒன்றுக்கு ரூ.1,422/– செலவழிக்கிறார். ஒரு நாள் மட்டும் வந்து செல்வபர் (Day Visitor), நாள் ஒன்றுக்குச் சராசரியாக ரூ.540/– செலவழிக்கிறார். வெளிநாட்டுப்பயணிகளில் 23 விழுக்காடு, நட்சத்திரத்தகுதி பெற்ற தங்கும் விடுதிகளிலும், 44 விழுக்காடு நடுத்தர தங்கும் விடுதிகளிலும், 13 விழுக்காடு விருந்தினர் விடுதிகளிலும், ஓய்வில்லங்களிலும் தங்குவதாக புள்ளிவிவரம் கூறுகிறது. இந்த வகைப்பாடுகளை உள்நாட்டுப் பயணிகளுடன் ஒப்பிடுகையில் முறையே 10 விழுக்காடு, 49 விழுக்காடு மற்றும் 19 விழுக்காடு என்பதாக உள்ளது.

## 8 சுற்றுலா வளர்ச்சிக்கு வருங்கால உத்தி

8.1 அண்மைக் காலத்தில் உலகளவில் சுற்றுலா பெரும் வளர்ச்சியைக் கண்டுள்ள துறையாகும். தமிழ்நாட்டிலும் சுற்றுலா வளர்ச்சி தேசிய சராசரி அளவையும் விஞ்சி விட்டது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழ்நாட்டின் பங்கு தேசிய சுற்றுலா வரவுகளில் பெருமளவு அதிகரித்துள்ளது. அது போன்று, உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழ்நாட்டின் பங்கு மகத்தானது. மேலும், அது தொடர்ந்து வளர்ந்து வருகிறது. இதன் பயனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு சுற்றுலா பல்முனை வளர்ச்சி உத்தியை தரமான சுற்றுலா வளர்ச்சியை எதிர்வரும் ஆண்டுகளில் அடையும் வகையில் தொடர்ந்து பின்பற்றி வருகிறது. சுற்றுலாப் பயணிகள் வருகையை அதிகரிக்கும் நோக்கத்துடனும், அவர்களின் தங்கும் காலத்தை நீட்டிக்க வைக்கும் நோக்கத்துடனும் தமிழ்நாடு சுற்றுலா செயலாற்றுகிறது. சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்தால் தான் கூடுதல் அந்நியச் செலாவணியை ஈட்டமுடியும் என்றும், கூடுதல் வேலைவாய்ப்பை உருவாக்க இயலும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.



8.2 சுற்றுலா மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்காக தமிழ்நாடு சுற்றுலா பின்வரும் பணிகளில் கவனம் செலுத்துகிறது.

1. சுற்றுலா வளவாய்ப்பைக் கண்டறிதல் மற்றும் பயன்படுத்துதல்
2. அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் உருவாக்குதல்
3. சுற்றுலாத் தலம் ஏற்கும் திறனுக்கேற்ப சுற்றுலாப்பயணிகளை முறைப்படுத்துதல்
4. எல்லா விதமான ஊடகங்களின் உபயோகத்துடன் அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஈர்த்தல்
5. புதிய சுற்றுலா சேவைகளை, மறக்கவொண்ணா நினைவுகளை ஏற்படுத்த வழங்குதல்

### 8.3 பிரபலமில்லா சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துதல்

சுற்றுலாப் பயணிகளுக்கு அறிமுகமில்லாத, சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த, பாரம்பரிய புனிதத் தலங்களை தமிழ்நாடு சுற்றுலா கண்டறிந்துள்ளது. அவ்விடங்களுக்கு உரிய விளம்பரம் மற்றும் சிறந்த உள்கட்டமைப்பு வசதிகள், நட்சத்திர விடுதிகள், கேளிக்கை பூங்காக்கள், கால்ப் விளையாட்டு, உடல் நலம் பேணும் இடங்கள், படகு இல்லங்கள் போன்ற தொழிலில் தொழில் முனைவோரை ஊக்குவிக்க பின்வரும் ஊக்க உதவித்தொகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

**8.3.1 தங்கும் விடுதிகளுக்கு ஒருமுறை ஊக்கத் தொகை**

| வ.எண். | நிலை /அந்தஸ்து | ஊக்கத்தொகை |
|---|---|---|
| அ | ஒரு நட்சத்திரம் | மொத்த திட்ட மதிப்பீட்டில் 10 விழுக்காடு (நிலமதிப்பு நீங்கலாக) அல்லது அதிக பட்சமாக ரூ.25.00 இலட்சம் |
| ஆ | இரண்டு நட்சத்திரம் | மொத்த திட்ட மதிப்பீட்டில் 10 விழுக்காடு (நில மதிப்பு நீங்கலாக) அல்லது அதிக பட்சம் ரூ.50.00 இலட்சம் |

| | | |
|---|---|---|
| இ | மூன்று மற்றும் அதற்குமேல் நட்சத்திர நிலை | மொத்த திட்ட மதிப்பீட்டில் 10 விழுக்காடு (நில மதிப்பு நீங்கலாக) அல்லது அதிகபட்சமாக ரூ.100.00 இலட்சம் |

### 8.3. 2 பிற சுற்றுலா முதலீடு வகைகளுக்கு ஒருமுறை ஊக்கத்தொகை

| | |
|---|---|
| பொழுதுபோக்குப் பூங்காக்கள், குழிப்பந்தாட்ட மைதானம், கம்பிவட ஊர்தி, படகு குழாம்கள் முதலியன | மொத்த திட்ட மதிப்பீட்டில் 10 விழுக்காடு (நில மதிப்பு நீங்கலாக) அல்லது அதிகபட்சமாக ரூ.100.00 இலட்சம் |

### 8.3.3 எளிய தவணை மற்றும் குறைந்த வட்டியுடன் கூடிய கடன்வசதி

சுற்றுலா மேம்பாட்டு வசதிகளை ஏற்படுத்துகையில் செலுத்தப்பட வேண்டிய மதிப்புக் கூட்டு வரியை செலுத்துவதற்காக முதல் ஐந்து ஆண்டுகளுக்கு, ஆண்டொன்றுக்கு 0.1 விழுக்காடு என்ற வீதத்தில் குறைந்த வட்டிக்கு கடன் அளிக்கப்படும்.

### 8.3. 4 பாரம்பரியக் கட்டிடங்களை தங்கும் விடுதிகளாக மாற்றுதல்

தமிழகத்திற்கு வருகை தரும் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க உரிய நடவடிக்கைகளை தமிழ்நாடு சுற்றுலா மேற்கொண்டு வருகிறது. பாரம்பரியக் கட்டிடங்களை, பாரம்பரியத் தங்கும் விடுதிகளாக மாற்றுவோருக்கு, கட்டுமானப் பணிகளுக்கான முதலீட்டில் 10 விழுக்காடு மானியமாக வழங்கப்படுகிறது.



### 8.3. 5 பாரம்பரிய விடுதிகளுக்கு மானியம்

அ) பாரம்பரிய விடுதி: 1950 ஆம் ஆண்டிற்கு முன்பு கட்டிடம் கட்டப்பட்டிருக்க வேண்டும். இதில் குறைந்தது 5 அறைகள் (10 படுக்கைகள்) இருக்க வேண்டும்.

ஆ) உயர்தர பாரம்பரிய விடுதி: 1935 ஆம் ஆண்டிற்கு முன்பு கட்டிடம் கட்டப்பட்டிருக்க வேண்டும். இதில் குறைந்தது 15 அறைகள் (30 படுக்கைகள்) இருக்க வேண்டும்.

இ) உணவு: இந்த தங்கும் விடுதி பாரம்பரிய உணவை அளிக்க வேண்டும். ஆனால், கான்டினென்டல் சமையலுக்கு ஏறக்குறைய அணுக்கமாக உள்ள நான்கு அல்லது ஐந்து உணவு வகைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

## 8.4 தமிழகத்தின் சுற்றுலா அதிசயங்கள்

தமிழகத்தில் உள்ள பல்வேறு சுற்றுலா அதிசயங்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை பெரிதும் ஈர்க்கிறது. சுற்றுலாப் பயணிகளுக்கு பயனளிக்கும் வகையில், தமிழகத்தின் சுற்றுலா அதிசயங்கள் உள்ள பகுதிகளை சீராக மேம்படுத்த, தமிழ்நாடு சுற்றுலா குறிப்பிட்ட இடங்களை தெரிவு செய்யும் நடவடிக்கை எடுத்து வருகிறது. தமிழகத்திலுள்ள சுற்றுலாத் தலங்களில் பல்வேறு வகைகளில் திட்டங்களை திட்டமிட்டு வளர்ச்சிப் பணிகளை தமிழ்நாடு சுற்றுலா மேற்கொண்டு வருகிறது.

- யுனெஸ்கோ அறிவித்துள்ள நினைவுச் சின்னங்கள் – மாமல்லபுரம், தஞ்சாவூரிலுள்ள சோழர் கால கோவில்கள் (பெரிய கோயில், கங்கை கொண்ட சோழபுரம், தாராசுரம்) மற்றும் நீலகிரியின் மலை ரயில்.
- சென்னை, காஞ்சிபுரம், மதுரை, இராமேசுவரம், தூத்துக்குடி, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் கன்னியாகுமரி ஆகிய முக்கிய நகரங்கள்

- முருகப் பெருமானின் அறுபடை வீடுகள் (திருப்பரங்குன்றம், சோலைமலை மண்டபம், சுவாமிமலை, பழனி, திருத்தணி மற்றும் திருச்செந்தூர்)
- நவக்கிரகத் தலங்கள் (வைத்தீஸ்வரன் கோவில், திருவெண்காடு, கீழப்பெரும்பள்ளம், திருநள்ளார், ஆலங்குடி, திங்களூர், திருநாகேஸ்வரம், சூரியனார் கோவில் மற்றும் கஞ்சனூர்)
- உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஆகிய மலை வாழிடங்கள்
- அதிகம் பிரபலமடையாத தலங்கள் – 18 (பிற்சேர்க்கை)
- பாரம்பரிய நகரங்கள் – 48 (பிற்சேர்க்கை)
- கிராமியச் சுற்றுலாத் தலங்கள்

## 8.5 ஏழு அதிசயங்கள்

அண்மையில், ஒரு தனியார் தொலைக்காட்சி அலைவரிசை ஒன்று, ஏழு அதிசயங்களை தமிழ்நாட்டின் அதிசயங்களாக (மீனாட்சியம்மன் கோவில், – மதுரை, பிரகதீஸ்வரர் கோவில் – தஞ்சாவூர், இராமநாதசுவாமி கோவில் – இராமேசுவரம், மலைக் கோட்டை – திருச்சிராப்பள்ளி, மாமல்லபுர சிற்பங்கள், சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிமன்ற கட்டிடம், செட்டிநாடு மாளிகை – கானாடுகாத்தான்) அறிவித்துள்ளது.

இது தவிர, பிச்சாவரம் சதுப்பு நிலக் காடுகள், சென்னையிலுள்ள சாந்தோம் தேவாலயம், மெரீனா கடற்கரை, விவேகானந்தர் நினைவுப் பாறை, மாத்தூர் தொட்டிப் பாலம், வேலூர் கோட்டை ஆகியவையும் குறிப்பிடப்பட்டுள்ளது. சுற்றுலா அதிசயங்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் அடிப்படை மற்றும் கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



## 8.6 அடிப்படை மற்றும் கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு

சுற்றுலாத் தலங்களில் அடிப்படை மற்றும் கட்டமைப்பு வசதிகள் பின்வரும் வகைகளில் ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- அறுபடை வீடுகள் பயணச்சுற்று
- நவக்கிரக பயணச்சுற்று
- சமணர் புராதனச் சின்னங்கள் பயணச்சுற்று
- ஆதி சங்கரர் பயணச்சுற்று
- சோழநாட்டு திருப்பதிகள் பயணச்சுற்று
- சென்னை – காஞ்சிபுரம் – மாமல்லபுரம் பயணச்சுற்று
- கிராம பயணச்சுற்று
- சுற்றுச்சூழல் பேணும் பயணச்சுற்று
- கடற்கரை காணும் பயணச்சுற்று – பழவேற்காடு, சென்னை, மாமல்லபுரம், முதலியார்குப்பம், ஆலம்பரக்கோட்டை
- வனவிலங்கு காணும் பயணச்சுற்று – கிண்டி குழந்தைகள் பூங்கா, அறிஞர் அண்ணா வனவிலங்கு பூங்கா, முதலைப் பண்ணை, முதுமலை, ஆனைமலை
- சுற்றுலா அதிசயங்கள் காணும் பயணச்சுற்று
- சப்தவிடத் தலங்கள் பயணச்சுற்று
- தென்னக பாரம்பரிய பயணச்சுற்று
- கிழக்கு கடற்கரைச் சாலை பயணச்சுற்று

## 8.7 மனித வள மேம்பாடு

### வழிகாட்டிகள் பயிற்சி முகாம்

தமிழகத்திலுள்ள கோயில்கள், அழகிய கடற்கரைகள், வினோதமான வனவிலங்கு சரணாலயங்கள், கண்கவர் அருவிகள், முகில் முட்டும் கண்கவர் மலை முகடுகள் ஆகியவற்றைக் காண ஆண்டு முழுவதும் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர்.

சுற்றுலா மேம்பாட்டில் வழிகாட்டிகள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். நாட்டின் வளத்தை சரியாக விவரிப்பதும், சரியான தகவல் கொடுப்பதும், சுற்றுலாப்பயணிகளுக்கு பாதுகாப்பான பயணத்தை ஏற்படுத்துவதும், குறையின்றி சுற்றுலாத் தலங்களில் தங்கி செல்ல ஏற்பாடு செய்வதும் வழிகாட்டியின் பொறுப்பாகும்.

வேலையில்லா இளைஞர்களுக்கும், ஓய்வு பெற்ற அரசு அலுவலர்களுக்கும் சென்னையிலுள்ள அண்ணா மேலாண்மை பயிற்சி மையத்துடன் ஒருங்கிணைந்து வழிகாட்டிகள் பயிற்சி முகாமை தமிழ்நாடு சுற்றுலா நடத்தி வருகிறது. ஊரக வளர்ச்சித் துறை, 400 நபர்களுக்கு வழிகாட்டிகள் பயிற்சி முகாமை நடத்த ரூ.22.10 இலட்சம் வழங்கி இருக்கிறது. இப்பயிற்சித் திட்டத்தில் ஒவ்வொரு குழுவிற்கும் 10 நாட்கள் பயிற்சியுடன் மூன்று நாட்கள் கள ஆய்வும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக 2008–09 ஆம் ஆண்டில் 133 நபர்களுக்கு வழிகாட்டி பயிற்சி அளிக்கப்பட்டது. 14 ஓய்வு பெற்ற அரசு அதிகாரிகளுக்கும் வழிகாட்டி பயிற்சி அளிக்கப்பட்டது. ஏற்கனவே பயிற்சி பெற்ற 64 நபர்களுக்கு ஒருங்கிணைப்பு பயிற்சியும் வழங்கப்பட்டது. பயிற்சி பெற்ற வழிகாட்டிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டது.

சுற்றுலா, விருந்தோம்பல் பண்பை அடிப்படையாகக் கொண்ட தொழிலாக கருதப்படுவதால், இதில், வரவேற்பு, விடுதி பராமரிப்பு, உள் அலங்காரம் மற்றும் உணவு ஆகிவற்றில் தொழில்நுட்பத்தை புகுத்த வேண்டியது அவசியமாகிறது. தமிழ்நாட்டில் இரண்டு அரசு சார்ந்த விடுதி மற்றும் உணவு மேலாண்மை நிறுவனங்கள் உள்ளன.

மாநில ஓட்டல் நிர்வாகம் மற்றும் உணவு மேலாண்மை நிறுவனம், துவாக்குடி, திருச்சிராப்பள்ளி (அகில இந்திய தொழில் நுட்பக் கல்வி குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்டு, தமிழ்நாடு அரசின் தொழில் கல்வி இயக்ககத்துடன் இணைக்கப்பட்டது) ஓட்டல்



நிர்வாகம் மற்றும் உணவு மேலாண்மையில் மூன்றாண்டு பட்டயப் படிப்பும், உணவு தயாரித்தல், உணவு மற்றும் பானங்கள் விநியோகம், விடுதி நிர்வாகம், ரொட்டி தயாரித்தல் ஆகியவற்றில் ஓராண்டு சான்றிதழ் படிப்பும் வழங்குகிறது. இருபத்தியாறு ஏக்கர் பரப்பில் விரிந்துள்ள இக்கல்வி நிறுவனத்தில் 600 மாணவர்கள் படித்து வருகின்றனர்.

சென்னை தரமணியில் இயங்கிவரும் ஓட்டல் நிர்வாகம், உணவு மேலாண்மை மற்றும் ஊட்டச்சத்து பயிற்சி நிறுவனம், ஓட்டல் நிர்வாகம் மற்றும் உணவு மேலாண்மையில் மூன்றாண்டு பட்டயப் படிப்பும், பல்வேறு கைவினை சான்றிதழ் படிப்புகளையும் பயிற்று வரும் நாட்டின் முன்னணி கல்வி நிறுவனங்களில் ஒன்று. இந்நிறுவனம் விருந்தோம்பல், விடுதி நிர்வாகம் மற்றும் உணவு மேலாண்மையில் தரமான கல்வியை கடந்த 44 ஆண்டுகளாக வழங்கி வருவதுடன், சுற்றுலாத் தொழிலுடன் சிறந்த இணைப்பை கொண்டுள்ளது. இந்த நிறுவனத்தில் சுமார் 600 மாணவர்கள் பல்வேறு பாடப்பிரிவுகளில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

### 8.8 திறன் சார் பயிற்சி

சுற்றுலாத்துறையின் முனைப்பான மற்றும் திறம்பட்ட மேம்பாட்டிற்காக, தமிழ்நாடு சுற்றுலா திறன் சார் வளர்ப்பு பயிற்சித் திட்டங்களை நடத்தி வருகிறது. கீழ்க்கண்ட வகைகளில் பயிற்சித் திட்டம் அளிக்கப்படும்.

- கிராமப்புறங்களில் வாழும் சமூகத்தினர்
- ஓட்டல்களில் வரவேற்பு பணிபுரியும் பணியாளர்கள்
- வாடகை சீருந்துகள் மற்றும் ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள்
- விமான நிலையங்கள் மற்றும் புகைவண்டி நிலையங்களில் சுற்றுலாப் பயணிகளை பேணுகின்ற பணியாளர்கள்
- கோயில் பணியாளர்கள்

## 8.9 தொழிலக நிறுவன தொடர்புகள்

இளைஞர்கள் சுற்றுலா கல்வியை எடுத்துப் பயில்வதை ஊக்குவிக்க, தமிழ்நாடு சுற்றுலா அவர்களுக்குத் தேவையான தகவல்கள் மற்றும் பிற தேவைகளை பகிர்ந்து கொள்கிறது. சுற்றுலா தொழில் சார்ந்த பயிற்சியும் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. துறையின் மூத்த அலுவலர்கள் சுற்றுலாக்கல்வி நிறுவனங்களுக்குச் சென்று சுற்றுலா மாணவர்களுடன் கலந்தாய்வு நடத்தி அவர்களுக்குத் தேவையான விபரங்களை வழங்கி வருகின்றனர்.

## 8.10 தொழில் ரீதியான அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கங்களுடனான ஒத்துழைப்பு

தொழில் ரீதியான குழுமமாகிய இந்திய மக்கள் தொடர்பு சங்கம் (சென்னை அத்தியாயம்), மற்றும் தென்னிந்திய விடுதி மற்றும் உணவகங்களின் சங்கம் (SIHRA), இந்திய பயணம் ஏற்பாடு செய்பவர் சங்கம் (IATO), இந்திய பயண முகவர்கள் சங்கம் (TAAI) ஆகிய சுற்றுலா தொழிற்சார்ந்த சங்கங்களுடன் சுற்றுலா மேம்பாட்டிற்காக தமிழ்நாடு சுற்றுலா முனைப்பாக ஒத்துழைப்பை நல்குகிறது.

# 9 சுற்றுலா கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு

**9.1** தமிழ்நாட்டின் சுற்றுலா வளர்ச்சிக்கு, உள்கட்டமைப்பு மேம்பாடு தலையாயதாகக் கொண்டு திகழ்கிறது. சுற்றுலா வளர்ச்சிக்கு சுற்றுலாத் தலங்கள் மற்றும் பயணச் சுற்றுகளை தெரிவு



செய்வது முக்கிய சரத்தாக திகழும். தமிழ்நாடு சுற்றுலா, பெரும் சுற்றுலா தலங்கள் மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த பயண வட்டங்களை கண்டறிந்துள்ளதுடன் தரங்கம்பாடி, மாமல்லபுரம், கொல்லி மலை, ஸ்ரீபுரம்–அரியூர் பகுதி, அமிர்தி காடுகள் – பாலமதி மலை, குற்றாலம், ஒகேனக்கல் மற்றும் திருச்செந்தூர் ஆகிய இடங்களுக்கான திட்டப்பணிகளுக்கு ஏற்கனவே அனுமதியளித்திருந்தது.

**9.2** இத்தகைய கட்டமைப்பு திட்டப்பணிகளுக்கு, மைய அரசின் சுற்றுலா அமைச்சகத்திடமிருந்து நிதியுதவி மற்றும் மாநில அரசின் நிதி அனுமதிகள் என துறையின் ஆதரவு இரண்டு நிலைகளில் வழங்கப்படுகிறது.

**9.3** சுற்றுலா வளர்ச்சிக்கு, மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. கட்டமைப்பு மேம்பாடு மற்றும் சுற்றுலாத் தல மேம்பாட்டிற்கு மைய மாநில அரசுகள் போதிய நிதி ஒதுக்கீட்டை வழங்குகின்றன. சுற்றுலாத்தலத்தில் ஒருங்கிணைந்த மேம்பாடு என்ற கொள்கையை மைய அரசு சுற்றுலா அமைச்சகம் சில வருடங்களுக்கு முன்பு வடிவமைத்து, வளர்ச்சித் திட்டங்கள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 9.4 மைய அரசு நிதி உதவி திட்டங்கள்

தென்னக மற்றும் மேற்கு மாநிலங்களிடையே, 2007–2008ம் ஆண்டில், அதிகபட்சமாக ரூ.2748.916 இலட்சம் மைய அரசு நிதி உதவி தமிழகத்திற்கு பெறப்பட்டுள்ளது. **2008–2009ம் ஆண்டில் மைய அரசின் சுற்றுலாத் துறை பின்வரும் சுற்றுலாப் பகுதிகள் மற்றும் சுற்றுலா**

சுற்றுச் சாலை மேம்பாடு ஆகியவற்றின் மேம்பாட்டிற்கு நிதி உதவி வழங்கியுள்ளது :

| வ. எண். | திட்டத்தின் பெயர் | ஒப்பளிப்பு செய்த தொகை | விடுவித்த தொகை |
|---|---|---|---|
| | | (ரூ. இலட்சத்தில்) | |
| 1. | சுற்றுலாத்தலங்கள் மேம்பாடு திட்டத்தின்கீழ் நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி மேம்பாடு | 373.08 | 298.47 |
| 2. | சுற்றுலாத்தலங்கள் மேம்பாடு திட்டத்தின் கீழ் திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காடு மேம்பாடு | 260.00 | 208.00 |
| 3. | சுற்றுலா சுற்றுச்சாலை திட்டத்தின் கீழ் வேலூர் – (ஸ்ரீபுரம் பொற்கோயில்) – பாலமதிமலை – அமிர்தி காடுகள் சுற்றுலா சுற்றுச்சாலை மேம்பாடு | 415.78 | 332.62 |
| 4. | மாமல்லபுரத்தில் பேருந்து வசதிகள் மற்றும் சுற்றுலா வசதி மையம் ஏற்படுத்துதல் | 366.03 | 218.42 |
| 5. | சுற்றுலாத்தலங்கள் மேம்பாடு திட்டத்தின்கீழ் நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை மேம்பாடு | 327.98 | 262.38 |
| 6. | விடுதலை போராட்டத் தலம் மேம்பாடு | 290.00 | 232.00 |
| 7. | சுற்றுலாத்தலங்கள் மேம்பாடு திட்டத்தின்கீழ் திருநெல்வேலி மாவட்டம் குற்றாலம் மேம்பாடு | 452.00 | 361.00 |
| 8. | சுற்றுலாத்தலங்கள் மேம்பாடு திட்டத்தின்கீழ் தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் மேம்பாடு | 402.00 | 322.00 |
| 9. | சுற்றுலாத்தலங்கள் மேம்பாடு திட்டத்தின்கீழ் ஒகேனக்கல் மேம்பாடு | 336.18 | 268.91 |
| | மொத்தம் | **3223.05** | **2503.80** |



**9.5 மைய அரசு நிதி உதவித் திட்டத்தின் கீழ் 2007–08 ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்டு நடைபெற்று வரும் திட்டங்கள்:**

| வ. எண். | திட்டத்தின் பெயர் | ஒப்பளிப்பு செய்த தொகை | விடுவித்த தொகை |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சதில்) | |
| 1 | சுற்றுலாத்தலங்கள் மேம்பாடு திட்டத்தின்கீழ் சிவகங்கை மாவட்டம் செட்டிநாடு மேம்பாடு | 475.35 | 380.28 |
| 2 | சுற்றுலாத்தலங்கள் மேம்பாடு திட்டத்தின்கீழ் திருச்சிராப் பள்ளி மாவட்டம் திருவரங்கம் மேம்பாடு | 372.70 | 298.16 |
| 3 | சுற்றுலாத்தலங்கள் மேம்பாடு திட்டத்தின்கீழ் மெரினா கடற்கரையை அழகுபடுத்தல் | 492.76 | 394.21 |
| 4 | சுற்றுலாத்தலங்கள் மேம்பாடு திட்டத்தின்கீழ் வேலூர் கோட்டை அதனை சுற்றியுள்ள பகுதிகள் மேம்பாடு | 89.32 | 71.46 |
| 5 | சுற்றுலா சுற்றுச்சாலை திட்டத்தின்கீழ் உதகமண்டலம் – முதுமலை–ஆனைமலை மேம்பாடு | 439.50 | 351.60 |
| 6 | சுற்றுலாத்தலங்கள் மேம்பாடு திட்டத்தின்கீழ் வேலூர் மாவட்டம் ஏலகிரி மேம்பாடு | 365.72 | 292.57 |
| 7 | சுற்றுலா சுற்றுச்சாலை திட்டத்தின்கீழ் சப்தவிடங்கள் ஸ்தலம் மேம்பாடு | 314.45 | 251.56 |
| 8 | சுற்றுலாத்தலங்கள் மேம்பாடு திட்டத்தின்கீழ் தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் மேம்பாடு | 187.00 | 149.60 |
| 9 | சுற்றுலா சேவை புரிபவர்களுக்கான பயிற்சி (Capacity Providers ) | 12.116 | 6.00 |
| | **மொத்தம்** | **2748.916** | **2195.44** |

## 9.6 மலைப்பகுதி மேம்பாட்டுத்திட்டம், நீலகிரி மாவட்டம்

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 2008–2009ம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள பல்வேறு சுற்றுலா மையங்களை மேம்படுத்துவதற்காக, ரூ.203.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதே போன்று, 2009–2010ம் ஆண்டில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பல்வேறு சுற்றுலாப் பகுதிகள் மேம்பாட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 9.7 மேற்குதொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டம்

மேற்கு தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2008–2009ம் ஆண்டில் ரூ.80.00 இலட்சம் கொடைக்கானலில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அதே போன்று, 2009–2010ம் ஆண்டில் மேற்கு தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சுற்றுலாப் பகுதிகள் மேம்பாட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 10 மாநில அரசு நிதி உதவித் திட்டங்கள்

10.1 2008–2009 ஆம் ஆண்டில் மாநில அரசு நிதி உதவித் திட்டத்தின் கீழ் பின்வரும் இடங்கள் மேம்பாட்டிற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

| வ எண் | திட்டத்தின் பெயர் | மாவட்ட நிர்வாக பங்கு | சுற்றுலாத் துறைப் பங்கு | மொத்த திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. | சென்னை மாவட்டம், கோயம்பேடு அ/மி குறுங்காலீஸ்வரர் மற்றும் அ/மி வைகுண்டாவாசப் பெருமாள் திருக் கோயிலுக்கும் இடையில் உள்ள மண் பாதையை கான்கிரீட் சாலையாக மாற்றுதல் | 0.00 | 3.40 | 3.40 |
| 2. | திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி அ/மி சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் பகுதியில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் | 69.12 | 69.13 | 138.25 |
| 3. | வண்டலூர் ஓட்டேரி ஏரி படகு குழாம் கட்டுதல் மற்றும் படகு வாங்குதல் | 0.00 | 20.00 | 20.00 |
| 4. | வேலூர் மாவட்டம் அ/மி லெட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில் பகுதியில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் | 16.17 | 16.18 | 32.35 |
| 5. | வேலூர் மாவட்டம் ஏலகிரி மலையில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் | 70.425 | 70.425 | 140.85 |
| 6. | விழுப்புரம் மாவட்டம் வீடூர் அணை மேம்பாடு | 0.00 | 30.00 | 30.00 |
| 7. | விழுப்புரம் மாவட்டம் கல்வராயன் மலை மேம்பாடு | 0.00 | 60.00 | 60.00 |
| 8. | நாகப்பட்டினம் மாவட்டம் நாகப்பட்டினம் கடற் கரையினை அழகு படுத்துதல் | 121.50 | 121.50 | 243.00 |
| 9. | பெரம்பலூர் மாவட்டம் சாத்தனூரில் உள்ள கல்மரத்தினை சுற்றி அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் | 0.00 | 50.10 | 50.10 |
| 10. | மதுரை மாவட்டம் மதுரையைச் சுற்றியுள்ள மூன்று முக்கிய கோயில் பகுதிகளில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் | 101..75 | 101.75 | 203.50 |
| 11. | திருநெல்வேலி மாவட்டம் அடவிநயினார் அணை (ம) பூங்கா, குண்டார் பூங்கா (ம) அணை, மணிமுத்தாறு (ம) கிருஷ்ணாபுரம் பகுதி மேம்பாடு ( 2ம் கட்டம்) | 30.23 | 30.23 | 60.46 |

| | | | | |
|---|---|---|---|---|
| 12. | திருநெல்வேலி மாவட்டம் தென் காசியில் உயர்மின் கம்ப விளக்கு மற்றும் தார்சாலை அமைத்தல் | 18.60 | 9.30 + (9.30 விடுவிக்க வேண்டும்) | 37.20 |
| 13. | கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிகோட்டை அ/மி பேட்டராயன் சுவாமி திருக்கோயில் பகுதியில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் | 0.00 | 9.75 | 9.75 |
| 14. | சேலம் மாவட்டம் தாரமங்கலத்தில்அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் | 0.00 | 60.00 | 60.00 |
| 15. | கன்னியாகுமரி மாவட்டம் திற்பரப்பு நீர் வீழ்ச்சி மேம்பாடு | 0.00 | 85.00 | 85.00 |
| 16. | இராமநாதபுரம் மாவட்டம் இராமேசுவரம் அக்னி தீர்த்தம் அருகில் வாகன நிறுத்துமிடம் அமைத்தல் | 25.50 | 24.00 | 49.50 |
| 17. | வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவின் முகப்பு பகுதியினை மேம்படுத்துதல் | 0.00 | 125.00 | 125.00 |
| 18. | கடலூர் மாவட்டம் வடலூர் அ/மி சத்ய ஞானசபை பகுதியில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் | 0.00 | 68.41 | 68.41 |
| | மொத்தம் | 453.295 | 954.175 | 1407.47 |



10.2 பகுதி–2 திட்டத்தின் கீழ் 2008–2009ம் ஆண்டில் பின்வரும் திட்டங்களுக்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

| வ.எண். | திட்டத்தின் பெயர் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | திருவள்ளூர் மாவட்டம் பூண்டி நீர்த் தேக்கம் மேம்பாடு | 50.00 |
| 2. | நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை மேம்பாடு | 100.00 |
| 3. | சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் சுற்றுலாதகவல் மையங்கள் புனரமைத்தல்<br>**சுற்றுலா அலுவலகங்கள்**<br>மாமல்லபுரம், மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் சிதம்பரம்<br>**சுற்றுலாதகவல் மையங்கள்**<br>வேலூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருவனந்தபுரம் | 30.00 |
| 4. | சுற்றுலா இயக்ககம் மற்றும் சுற்றுலா அலுவலகங்களுக்கு கணினி மற்றும் நிகரி இயந்திரம் வாங்குதல் | 8.20 |
| 5. | சுற்றுலா இயக்ககம் மற்றும் சுற்றுலா அலுவலகங்களின் பயன்பாட்டிற்கு மடிக் கணினி வாங்குதல் | 3.50 |
| 6. | சுற்றுலா அலுவலகங்களின் பயன்பாட்டிற்கு புகைப்படக் கருவி வாங்குதல் | 2.52 |
| | **மொத்தம்** | **194.22** |

10.3 2007–08 ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட பின்வரும் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

| வ.எண். | திட்டத்தின் பெயர் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சிவகங்கை மாவட்டம் குன்றக்குடியில் கட்டமைப்பு வசதிகள் செய்தல் | 43.25 |
| 2. | தூத்துக்குடி மாவட்டம் பாஞ்சாலங்குறிச்சியில் மேம்பாடு மற்றும் புனரமைப்புப் பணிகள் | 28.50 |
| 3. | திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்தில் வளர்ச்சிப் பணிகள் | 44.00 |
| 4. | கோயம்புத்தூர் மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் வனபத்திரகாளியம்மன் கோயிலில் அடிப்படை வசதிகள் | 34.49 |
| 5. | குலசேகரபட்டினத்தில் கடற்கரை பூங்கா அமைத்தல் | 22.00 |
| 6. | சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் பூங்கா | 59.00 |
| 7. | ஆலங்குடி, வலங்கைமான் மற்றும் வடுவூர் ஆகிய புனிதத் தலங்களில் அடிப்படை வசதிகள் | 5.37 |
| 8. | தேனி மாவட்டம் குச்சனூர் அ/மி சனீஸ்வரபகவான் கோவில் பகுதியில் அடிப்படை வசதிகள் | 23.25 |
| 9. | தூத்துக்குடி மாவட்டம் எட்டையாபுரத்தில் வளர்ச்சிப் பணிகள் | 31.25 |
| 10. | திருவாவூர் மாவட்டம் கண்கொடுத்தவனிதம் எனுமிடத்தில் கட்டமைப்பு வசதிகள் | 62.30 |
| 11. | நாகப்பட்டினம் மாவட்டம் சிக்கலில் வளர்ச்சிப் பணிகள் (அ/மி நவநீதேஸ்வரர் சுவாமி திருக்கோயில் வளாகத்தில் மேம்பாடு மற்றும் அழகுபடுத்தும் திட்டம்) | 14.97 |
| 12. | மதுரை எல்லீஸ் நகரில் புனிதப் பயணியர் விடுதி மற்றும் அ/மி மீனாட்சியம்மன் கோவிலின் ஐந்து வாசல்களிலும் காலணி மற்றும் பொருள் வைப்பறை கட்டுதல் | 42.45 |
| 13. | திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சுற்றுலாத் தலங்களில் அடிப்படை வசதிகள் (மொத்த திட்ட மதிப்பீடு ரூ.81.45 இலட்சத்தில் ரூ.34.93 மட்டும் இவ்வாண்டில் ஒப்பளிக்கப்பட்டுள்ளது) | 34.93 |



**10.4 ஏனைய துறைகளிடமிருந்து நிதிகளை ஒருங்கிணைத்தல்**

**10.4.1** சுற்றுலா தலங்களில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காக சுற்றுலாத்துறையானது, மாநில அரசின் சம்பந்தப்பட்ட பிற துறைகளுடன் இணைந்து நிதி ஒதுக்கியுள்ளது.

**10.4.2** ஊரகச் சுற்றுலாவை மேம்படுத்துமாறு சுற்றுலா துறை கேட்டுக் கொண்டவாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் துறை, "கட்டமைப்பு வசதிகள் தொடர தொய்விலா நிதி" என்ற நிதியை ஏற்படுத்தியது. சுற்றுலாத் தலங்களை இணைக்கும் சாலைகள் மேம்பாட்டிற்கு நெடுஞ்சாலைத்துறை ரூ.25 கோடி நிதி ஒப்பளிப்பு அளித்துள்ளது. சுற்றுலா வரவு செலவு திட்டத்தின் வரம்பின் கீழ், நெடுஞ்சாலைகளை மேம்படுத்துவதற்காக, அரசு, ரூ.10.00 கோடி வழங்கியுள்ளது. புனித வழிபாட்டுத்தலங்களில் மேற்கொள்ளப்படும் சுற்றுலாத் திட்டங்களுக்கு செயல்படுத்த தொடர்ந்து 50 சதவிகித நிதியை, இந்து சமய அறநிலையத் துறை வழங்கி வருகிறது. ஏனைய துறைகளிடமிருந்து பெறப்பட்ட செய்தி, கல்வி, தகவல் தொடர்பு நிதிகளும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்திய சுற்றுலாப் பொருட்காட்சிக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**10.4.3** பின்வரும் திட்டங்கள், பொருட்காட்சிகள், பண்டிகைகள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் செயல்படுத்தப்பட்டுள்ளது.

- தீவுத்திடலில் சாகசச் சுற்றுலா
- முதலியார்குப்பத்தில் நீர்விளையாட்டுக்கள்
- ஊட்டி, ஏற்காடு ஏலகிரி முதலிய மலை வாழிடங்களில் முகாமிடும் இடங்கள்
- மலை வாழிடங்களில் சிகரப் பயணம்

- மாமல்லபுரத்திலுள்ள கடற்கரை உணவகங்களில் கூடாரக்குடில்கள்
- பாரம்பரியக் கட்டிடங்களை பாரம்பரிய ஒட்டல்களாக மாற்றுதல்
- பொருட்காட்சிகள், பண்டிகைகள்
- சென்னை மற்றும் கோயமுத்தூரில் கோடைக்கால பொருட்காட்சிகள்
- சென்னையில் உணவுத் திருவிழா
- சென்னையில் கல்வி மற்றும் சுற்றுலா கண்காட்சி

## 11 புதிய சுற்றுலா வகைகள்

### 11.1 சமூக பொறுப்புணர்வுச் சுற்றுலா

கிராமப்புறங்களின் மேம்பாட்டிற்காக அதன் வாழ்வாதாரங்களையும், வாழ்க்கை முறையையும் சுற்றுலாப் பயணிகளுக்கு குறிப்பாக இளைய சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டும் வகையில், சுற்றுலாத்துறை அயராத முயற்சிகளை எடுத்து வருகிறது. இம்முயற்சி கிராமப்புறங்களை சுற்றுலாவுக்கு உகந்ததாக மாற்றுவதுடன் கிராம மக்களின் சமூக பொருளாதார தரத்தை உயர்த்தவும் வழி கோலுகிறது. நுட்பமான உயிரின வாழ்க்கைச் சூழல், சிறந்த பழக்க வழக்கங்கள் மற்றும் விருந்தினர்களை போற்றுவது தொடர்பான உள்ளூர் பொது மக்களின் பொறுப்புத் தன்மையை பதிய வைப்பதற்கும், கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் சம்பிரதாயங்களை சுற்றுலாப் பயணிகள் தவறாக பயன்படுத்துவதை தவிர்ப்பது தொடர்பாக, அவற்றுக்கு மிகவும் மதிப்பளிக்க செய்வதும் சமூக பொறுப்புணர்வுச் சுற்றுலாவின் நோக்கம் ஆகும்.

### 11.2 சுற்றுச் சூழல் சுற்றுலா

சில சுற்றுலாப் பயணிகள் சுற்றுச் சூழல் ஆர்வலர்களாக இருப்பர். தமிழ்நாட்டில் மலை வாழிடங்கள், அருவிகள், வனங்கள், பறவைகள் சரணாலயங்கள், கடற்கரைகள் என பல வகையான சுற்றுலா செல்வங்கள் ஏராளமாக உள்ளன. தமிழ்நாடு சுற்றுலா



வளர்ச்சிக் கழகத்தில் வனத் துறையிலிருந்து ஒரு அலுவலரை நியமித்து சுற்றுச் சூழல் சுற்றுலா பிரிவை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சுற்றுலாத் தொழில் புரிவோரிடம் முனைப்பை ஏற்படுத்துதல், திறன்சார் முன்னேற்றம் மற்றும் அரசு–தனியார் கூட்டுத் தொழிலில் வருமானம் ஈட்டுதல் ஆகியவைகளில் தொடர்ந்து சுற்றுலா ஒருமித்த நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் தமிழ்நாட்டை உலகளவில் சிறந்த மாநிலமாக ஆக்குவதே தமிழ்நாடு சுற்றுலாவின் தொலைநோக்கு பார்வையாகும்.

### 11.3 ஊரகச் சுற்றுலா

**11.3.1** ஊரக அமைவிடங்களின் வாழ்க்கை, கலை, பண்பாடு, பாரம்பரியம் ஆகியவற்றை சித்தரிப்பதற்கும், உள்ளூர் சமுதாயம் பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் ஆதாயம் அடைவதற்கும், சுற்றுலாப் பயணிகளும், உள்ளூர் மக்களும் ஒவ்வொருவருக்கிடையேயான அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கும், அவர்களுக்கிடையே தொடர்பை ஏற்படுத்துவதற்கும், கிராமியச் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கு தமிழ்நாடு சுற்றுலா, முடிவு செய்துள்ளது.

**11.3.2** அதிவேகமாக வளர்ந்து வரும் தொழில் நகரங்களின் உருவாக்கத்தால், மக்கள் வாழ்வாதாரத்திற்காக கிராமங்களை விட்டு வெளியேறி நகரங்களுக்கு குடி புகும் சூழல் அதிகரித்துள்ளது. இதனால், நகரில் வளரும் மக்களுக்கு குறிப்பாக சிறார்களுக்கு கிராமியப் பண்பாடு மற்றும் அன்றாட நடைமுறைகள் தெரியாமலேயே போகிறது. எனவே, தங்களது கிராமிய வளத்தை, நடைமுறைகளை இளைஞர்களுக்கு புகட்டிடும் நிலைக்கு அவர்களது பெற்றோர் ஆளாகியுள்ளனர். கிராம மக்களின் வாழ்க்கை முறையை சுற்றுலாப்பொருளாக சித்தரிப்பதன் மூலம் சுற்றுலாப் பயணிகளை அதிக எண்ணிக்கையில் கிராமங்களுக்கு ஈர்க்க இயலும்.

**11.3.3** மைய அரசு சுற்றுலா அமைச்சகம் ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டத்துடன் (UNDP) இணைந்து திறன் வளர்ப்பை

முதன்மைத் திட்டமாக கிராமியச் சுற்றுலாவிற்காக எடுத்துக் கொண்டுள்ளது. மைய அரசு சுற்றுலா அமைச்சகம் வன்பொருள் திட்டங்களுக்கு வரையறுக்கப்பட்ட வரம்பிற்குள், நிதி உதவி வழங்கி வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உள்ளூர் சமுதாயத்தின் ஒருங்கிணைப்புடன், ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டத்தால் கண்டறியப்பட்ட அரசு சாரா அமைப்பின் பங்கேற்புடன், மென் பொருள் திட்டக்கூறு செயல்படுத்தப்பட்டது. ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வரும் பகுதிகளுக்கு அப்பாற்பட்ட ஏனைய ஊரக இடங்களுக்கு சேவை வழங்குவோருக்கான திறன் வளர்ப்பு பயிற்சித் (ESP) திட்டத்தையும், மத்திய அரசு நீட்டித்துள்ளது. மைய அரசு சுற்றுலா அமைச்சகம் ஒப்பளித்த திட்டப்பணிகளின் பட்டியல் ஒன்று, கீழே விவர அட்டவணையில் அளிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | திட்டத்தின் பெயர் | மைய அரசு சுற்றுலா அமைச்சகம் ஒப்பளித்த தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | தூத்துகுடி மாவட்டம் கழுகுமலை மேம்பாடு:<br>கட்டமைப்பு வசதிகள்<br>பயிற்சித் திட்டம் | <br>48.68<br>20.00 |
| 2. | சிவகங்கை மாவட்டம் செட்டிநாடு மேம்பாடு:<br>கட்டமைப்பு வசதிகள்<br>பயிற்சித் திட்டம் | <br>50.00<br>20.00 |
| 3. | தர்மபுரி மாவட்டம் தீர்த்தமலை மேம்பாடு | 50.00 |
| 4. | இராமநாதபுரம் மாவட்டம் தேவிப்பட்டினம் மேம்பாடு (மாநில அரசு பங்கு ரூ.25.60 இலட்சம்) | 50.00 |
| 5. | திருநெல்வேலி மாவட்டம் திருக்குறுங்குடி மேம்பாடு | 50.00 |
| 6. | திருநெல்வேலி மாவட்டம் திருப்புடைமருதுார் மேம்பாடு | 49.50 |
| 7. | தேனி மாவட்டம் குறங்கணி மேம்பாடு | 50.00 |
| 8. | திண்டுக்கல் மாவட்டம் தடியன்குடிசை மேம்பாடு | 50.00 |
| 9. | விழுப்புரம் மாவட்டம் இடையன்சாவடியில் பயிற்சி திட்டம் (மென் பொருள் திட்டத்திற்கு) | 20.00 |



11.3.4 தமிழ்நாடு சுற்றுலா கிராமப்புறங்கள் வளர்ச்சிக்கு கிராமங்களைத் தெரிவு செய்து வளர்ச்சிப் பணிகளை படிப்படியாக செய்து வருகிறது.

11.3.5 தொழில் மற்றும் சுற்றுலாப் பொருட்காட்சியில் கிராமியப் பின்னணியில் ஓர் உணவகத்தை திறந்து கிராமிய உணவை வழங்கியது.

11.3.6 சென்னை தொழில் மற்றும் சுற்றுலாப் பொருட்காட்சியில் கிராமிய வாழ்க்கை முறையை சித்தரிக்கும் சுற்றுலா கிராமம் ஏற்படுத்தப்பட்டது. இது பார்வையாளர்களை மிகவும் கவர்ந்தது. இதனை மிகவும் சிறந்த அரங்காக நடுவர்கள் தேர்ந்தெடுத்தனர்.

11.3.7 குடியரசு தின அணிவகுப்பிலும், தமிழ்நாடு சுற்றுலா அலங்கார அணிவகுப்பில் கிராமியச் சுற்றுலாவை உரிய வகையில் சித்தரித்து விருதினைப் பெற்றது.

## 11.4 சாகசச் சுற்றுலா

11.4.1 20ஆம் நூற்றாண்டில், பாரம்பரிய வெளியிடம் மற்றும் வனாந்திர பொழுதுபோக்கின் பெரும் வளர்ச்சி காரணமாக, சாகசச் சுற்றுலா மேம்பட்டுள்ளதாகத் தெரிகிறது. ஏனைய பொழுது போக்கு அம்சங்களைப் போலல்லாமல், சாகசச் சுற்றுலா, விந்தையான வாய்ப்பு ஒன்றை அளிக்கிறது. இதில் பங்குபெறுவோர் மிகுந்த அனுபவம் பெறுவதுடன் "சாகச முயற்சிகளையும்" நீடித்த அளவிற்கு மேற்கொள்வர். பாரம்பரிய வடிவிலான பொழுது போக்குகளில், வழக்கமாக, திட்டவட்டமான வெளிப்புற அமைப்பில் உள்ள பயிற்சித் திறன் கூறுகள் அமைந்திருக்கும். இந்த "அமைப்புக்கூறானது" (Setting), சிறப்பு ஈடுபாடு கொண்ட பயணத்தில், "செயல்பாடுகளை" தான் சாகசச் சுற்றுலா மேற்கொள்ளும் சுற்றுலாப் பயணிகளை பங்கேற்பாளராகக்

கவருகிறது. இந்த சாகசச் சுற்றுலா முதலில் செயல்பாடுகளுடன் தொடர்புடையதாகும் என்று இந்த ஆய்வு வாதிடுகிறது. இந்த பயணத்தின் நோக்கமே, பாரம்பரிய சுற்றுலா இடங்களை வெறுமனே சுற்றுலாத் தலமாகப் பார்ப்பது மட்டுமின்றி, அதில் பங்குபெறுவதன் வாயிலாக அனுபவங்கள் பெறப்பட வேண்டும் என்பதே ஆகும்.

11.4.2 சாகசப் பயணத்தைப் பற்றி விளக்க அதில் நடைபெறும் நடவடிக்கைகள், உந்து சக்தி, இடர்காப்பு, செயலாக்கம், அனுபவம், சுற்றுச் சூழல் ஆகிய பல்வேறு திட்டக்கூறுகளை கருத்தில் கொள்ள வேண்டும்.

11.4.3 சுற்றுலாத் தலங்களில் சாகச சுற்றுலாவை தமிழ்நாடு சுற்றுலா வளர்த்து வருகிறது. முட்டுக்காடு மற்றும் முதலியார்குப்பம் படகு குழாம்களில் புனல் விளையாட்டிற்கு சாகசப் படகுகள் இயங்கி வருகின்றன. கடின நடைப்பயணத்திற்குத் தேவையான சாதனங்களை சுற்றுலாப் பயணிகளுக்கு தமிழ்நாடு சுற்றுலா வாடகைக்கு வழங்குகிறது. மலை வழி நடைப்பயணத்திற்கு தேவைப்படும் உபகரணங்களை வழங்குவதோடல்லாது, மலைப்பகுதிகளில் நடை பயணத்தை இந்திய இளைஞர் விடுதிகள் சங்கத்துடன் ஒருங்கிணைந்து தமிழ்நாடு சுற்றுலா செயலாக்கி வருகிறது. முதலியார்குப்பத்தில் உள்ள நீர் ஸ்கூட்டர்கள், அதிவேக படகுகள், பனிக்கடற் படகுகள் மற்றும் வாழைப்பழ வடிவிலான படகுகள் இளைஞர்கள் மத்தியில் சிலிர்ப்பான அனுபவத்தை தருகின்றன. தீவுத்திடலில், தனியார் பங்குடன், பல்வகை சாகச விளையாட்டுக்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. உயரமான இடத்திலிருந்து குதித்துப் பறக்கும் 'பாரா கிளைடிங்' எனும் விண்ணில் காற்றின் உதவியுடன் நிகழ்த்தும் மலை சறுக்கு விளையாட்டு ஏலகிரியில் சுற்றுலாப் பயணிகள் பலரை கவர்ந்தது. முதலியார்குப்பத்தில் 'பாரா செயிலிங்' எனும் கடலில் மிதந்து செல்லும் விளையாட்டு விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.



## 11.5 மருத்துவச் சுற்றுலா

11.5.1 அண்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் மக்களுக்கு தமிழ்நாடு சிறந்த மருத்துவ சேவையை வழங்குகிறது. அதி நவீன மருத்துவ சேவையை கொண்ட உலகத்தரம் வாய்ந்த மருத்துவமனைகள், மருத்துவ வல்லுநர்கள், அரசு மருத்துவமனைகள் உலகின் பிற பகுதிகளிலிருந்தும் நாட்டின் பல பாகங்களிலிருந்து வரும் நோயாளிகளுக்கு சேவை புரிந்து அவர்கள் குணமடைந்து உடல் நலத்துடன் திரும்ப உதவியுள்ளது. அவ்வாறு வரும் நோயாளிகள் விரைவில் குணமடைந்து புத்துணர்வு பெற்று தமது சாதாரண நிலைக்கு வர, அவர்கள் சுற்றுலாத் தலங்களை காண உரிய வசதிகளை தமிழ்நாடு சுற்றுலா செய்து வருகிறது.

11.5.2 மேலும், தமிழ்நாடு சுற்றுலாத்துறை, மருத்துவமனைகளுடன் ஒருங்கிணைந்து, மருத்துவ சுற்றுலாவின் மகத்துவத்தை எடுத்துரைக்க தொடர் நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. இம்முயற்சியில் வெற்றி பெற மருத்துவ சுற்றுலாவின் மகத்துவத்தை உணர்ந்து, மருத்துவ சுற்றுலா தகவல் மையம் தமிழ்நாடு சுற்றுலா வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. சென்னை மற்றும் மதுரையில் உள்ள பல்வேறு மருத்துவமனைகளில் சுற்றுலா தகவல் மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

11.5.3 வெளிநாடுகளிலிருந்தும் உள்நாட்டிலிருந்தும் வந்த மருத்துவ சுற்றுலாப் பயணிகள் பெற்று வரும் மருத்துவ சேவையை கண்காணிப்பதற்கு, பல முன்னணி மருத்துவ நிறுவனங்கள் மற்றும் மருத்துவக்கல்வி இயக்ககத்திலிருந்து நிபுணர்களைக் கொண்டு ஒரு முதன்மை குழுமம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழுமம் சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான முன்னேற்ற மருத்துவ சேவை குறித்து தமிழ்நாடு சுற்றுலாவிற்கு அறிவுரை வழங்குகிறது. தமிழ்நாட்டிற்கு மருத்துவ சேவை பெற வரும் நோயாளிகளுக்கு உதவிட இங்குள்ள தரமான மருத்துவமனைகள் குறித்த விபரத்தை, அரசு சாரா நிறுவனமான மெடிடூர் இந்தியா மற்றும் பிற மருத்துவ

நிறுவனங்களின் அட்டவணை தமிழ்நாடு சுற்றுலாவின் வலைதளம் மூலம் வெளியுலகிற்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

**11.5.4** மருத்துவ சுற்றுலாவின் மகத்துவம் குறித்து விழிப்புணர்வு பெற, பல்வேறு மருத்துவமனைகளில் பணிபுரியும் முதன்மை நிர்வாக அதிகாரிகளுக்கும், மக்கள் தொடர்பு மேலாளர்களுக்கும் திறன் வளர்ப்பு பயிற்சி வழங்கப்பட்டது. மருத்துவ சேவையை சுற்றுலா தோழமையுடன் கூடியதாக்க பல்வேறு மருத்துவமனைகளின் வரவேற்பு அலுவலகத்தில் "சுற்றுலா தகவல் மையம் " வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. வெளிநாட்டு மருத்துவச் சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை மனதிற்கொண்டு, தமிழ்நாடு சுற்றுலா மருத்துவ ஆய்வை விரைவாகவும், குறைந்த செலவில் ஒளிவுமறைவின்றி பெற உரிய வழிகாட்டி நெறிமுறை குறிப்புகளை பல்வேறு மருத்துவமனைகளுக்கு வழங்கியுள்ளது.

**11.5.5** மருத்துவப் பயணிகள், தமிழ்நாட்டிலுள்ள பொருளாதார, சமூக, கலாச்சார மற்றும் மனிதத்துவ பொக்கிஷங்களைக் கொண்டு செயல்படும் மருத்துவமனைகளிலுள்ள நவீன சேவைகளை நுகர, இம்மருத்துவமனைகளை ஊக்குவிப்பதன் மூலம் மருத்துவச் சுற்றுலாவில் தமிழகத்தை நாட்டின் முதன்மையானதாக உருவாக்க தமிழ்நாடு சுற்றுலா செயல்பட்டு வருகிறது.

**11.5.6** இதற்கான முதன்மைக் குழு, தொடர்ந்து கூட்டங்களை நடத்தி வந்தது. மையக் குழு எடுத்த முக்கிய முடிவுகள் வருமாறு:

- மருத்துவமனைகளை கண்டறிதல்
- கண்டறியப்பட்ட மருத்துவமனைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்
- மருத்துவ சுற்றுலா மடிப்பேடு வெளியிடுதல்
- கண்டறியப்பட்ட மருத்துவமனைகளில், சுற்றுலா தகவல் மையம் தொடங்குதல்



- திறன் வளர்ப்பு பயிற்சியை சுற்றுலா / மருத்துவ சுற்றுலா தகவல் கையாள தரம் வாய்ந்த மருத்துவமனை பணியாளர்களுக்கு வழங்குதல்
- கருத்தரங்குகள் / பயிலரங்குகள் நடத்துதல்

**11.5.7** தற்போது, மருத்துவ சுற்றுலாப் பயணிகள் மற்றும் அவர்களின் கவனிப்பாளர்களுக்கும் மருத்துவ விசாக்கள், ஓராண்டு வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இதனால் மருத்துவ பயணிகள் வருகை கீழே தெரிவிக்கப்பட்டவாறாக அதிகரித்துள்ளது.

| ஆண்டு | பதிவு எண்ணிக்கை |
|---|---|
| 2006 | 566 |
| 2007 | 3307 |
| 2008 | 7307 |

**11.6 உணவு மற்றும் உறையுள் (வீட்டில் தங்கல்) திட்டம்**

**11.6.1** சுற்றுலாத் தலங்களில் வசிப்பவர்கள், தொகை பெற்றுக் கொண்டு அவர்களுடைய வீடுகளில் உள்ள கூடுதல் அறைகளில் தங்க அனுமதிப்பதன் வாயிலாக கூடுதல் வருவாய் ஈட்டுவதற்கு வகை செய்வதற்காக, உணவு மற்றும் உறையுள் (வீட்டில் தங்கல்) திட்டம் தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**11.6.2** இத்திட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், பிரபலப்படுத்தவும் தமிழ்நாட்டில் ஆறு இடங்களில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. தமிழ்நாடு சுற்றுலா, தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களிலிருந்து உணவு மற்றும் உறையுள் சேவை புரியும் எழுபத்தேழு (77) நபர்களை பட்டியலிட்டதுடன், இது குறித்த தகவலை தமிழ்நாடு சுற்றுலாவின் வலைதளத்தில் வெளியிட்டுள்ளது. இச்சேவை புரிவோரின் விபரக் கையேடு ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

## 12 விளம்பரம் மற்றும் சந்தைப்படுத்தல்

### 12.1 விளம்பரங்கள்

**12.1.1** வெளிநாட்டு வானூர்தி பத்திரிக்கைகளிலும், பிற பெயர்பெற்ற சுற்றுலா பத்திரிக்கைகளிலும் விளம்பரங்கள் வெளியிடுவதன் மூலம் தமிழ்நாடு சுற்றுலா உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் விளம்பரங்களை தொடர்ந்து செயலாக்கி வருகிறது.

**12.1.2** விளம்பரங்கள், எப்.டபிள்யூ.வி, காண்டினாஸ்ட் டிராவலர், ஹை லைப், சில்வர் கிரிஸ், கோயிங் பிலேசஸ், செல்லிங் லாங் உறால், உர்லாப் பெர்பெக்ட், டபிள்யூ.டி.எம். கேடலாக், ஏசியன் வாய்ஸ், தேசி நியூஸ் (கனடா), டெலிகிராப் (யூ.கே), மலேசிய நண்பன், தமிழ் முரசு (சிங்கப்பூர்), ஜலன் ஜலன் (இந்தோனேசியா), தி ஸ்டார், டூரிஸ்டிக் ஆக்சுவல், ஜியோ சாய்சன், கல்ப் நியூஸ், பட்ஜெட் டிராவலர், கலீஜ் டைம்ஸ் முதலிய பத்திரிக்கைகளில் வெளியிடப்பட்டன.

**12.1.3** பல்வேறு உள்நாட்டு விமான பத்திரிக்கைகளிலும் நமஸ்கார், ஜெட் விங்ஸ், சுவாகத், விண்டோஸ் மற்றும் எய்சில்ஸ், அவுட்லுக் டிராவலர், நேசனல் "ஜியாகிரபி (இந்தியா ஸ்பிலிட்), டிராவ் டாக், வோர்ல்டு ஆப் டூரிஸம் மற்றும் டிராவல், ஆஸ்பிடாலிடி இந்தியா, ஏசியன் டிராவலர், வாயேஜர்ஸ் வோர்ல்டு, அவுட்பவுண்ட் இண்டர்நேசனல் இந்தியா, டிராவல் ஸ்பான், டுடேஸ் டிராவலர், இந்தியா டுடே டிராவல் பிளஸ், டிராவல் + லெசர் முதலிய பயண பத்திரிக்கைகளிலும் விளம்பரங்கள் வெளியிடப்பட்டன.

**12.1.4** கோடை முகாம், மாமல்லபுரம் நாட்டிய விழா, இரயில் மற்றும் சாலை பயணத்திட்டம் போன்ற நிகழ்வு பற்றிய திட்டவட்டமான பிரச்சாரங்கள் குறித்த விளம்பரங்கள் பிரபல ஆங்கில நாளிதழ்களிலும், பத்திரிக்கைகளிலும் வெளியிடப்பட்டன. உள்ளூர் சுற்றுலா நிகழ்வுகள் மற்றும் விழாக்கள் குறித்து உள்ளூர் நாளிதழ்களிலும், பத்திரிக்கைகளிலும் காலமுறையாக விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன. இது குறித்த முக்கிய நிகழ்வுகள் மீதான செய்திகள் தொடர்ந்து பிரசுரமாகின்றன. புதிய சுற்றுலாத் திட்ட முயற்சிகள் குறித்து விபரங்களல்லாது, ஒலி மற்றும் காட்சி விளம்பரங்கள் வானொலியிலும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் தொடர்ந்து விளம்பரப்படுத்தப்படுகின்றன.



### 12.2 சுற்றுலா வெளியீடுகள்

**12.2.1** தகவல் மடிப்பேடுகள் மற்றும் புத்தகங்கள், உயர் தொழில் நுட்ப ஊடகப் பொருட்களான குறுந்தகடுகள், 25 நிமிடங்கள் மற்றும் ஆறு நிமிடங்கள் ஓடக்கூடிய அதி நவீன குறுந்தட்டுகள், டிஜிட்டல் வீடியோ தட்டுகள் ஆகியவை சுற்றுலாப் பயணிகளுக்கு தகவல் தர மிகவும் இன்றியமையாததாகும். 2008–09 ஆம் ஆண்டில் பின்வரும் மடிப்பேடுகள் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள உலக பாரம்பரியச் சின்னங்கள் மீதான காபி மேசை புத்தகங்கள் வெளியிடப்பட்டன. அவை வருமாறு.

- நிகழ்வுகள் புத்தகம் ( பொருட்காட்சிகள் மற்றும் விழாக்கள்)
- தமிழ்நாட்டின் வரைபடம் (ஆங்கிலத்தில்)
- கன்னியாகுமரி, மதுரை, மாமல்லபுரம், திருச்சிராப்பள்ளி, சிதம்பரம், ஏற்காடு, காஞ்சிபுரம், குற்றாலம் (ஆங்கிலம் மற்றும் தமிழில்), தஞ்சாவூர், ஒகேனக்கல், மருத்துவ சுற்றுலா மற்றும் கிராமிய சுற்றுலா மடிப்பேடுகள்
- தமிழக சுற்றுலாத் தலங்கள் குறித்த கையேடு (தமிழில்)
- 2006 மற்றும் 2007 ஆண்டுகளில் வெளியிடப்பட்ட அரசாணைகளின் தொகுப்பு ( பல்வேறு சுற்றுலா திட்டங்களுக்கு அனுமதிக்கின்றவாறு வெளியிடப்பட்ட அரசாணைகளுக்கு இணங்கி நடத்தல்)
- "ஏலகிரி மலைகள் குறித்த ஒரு ஆய்வுக்குறிப்பு" கையேடு

**12.2.2** சுற்றுலா தொழில் சார்ந்தோரின் பங்களிப்புடன் 2008 ஆம் ஆண்டின் சுற்றுலா நாட்காட்டி வெளியிடப்பட்டது.

12.2.3 வன விலங்கு மற்றும் இயற்கை காட்சிகள் கொண்ட 'தமிழ்நாட்டின் இயற்கை வளங்கள்' எனும் 2009 ஆம் ஆண்டின் சுற்றுலா நாட்காட்டி வெளியிடப்பட்டது. இது சுற்றுலா பொறுப்பாளர்களிடமிருந்தும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடமிருந்தும் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

12.2.4 விளம்பரத்தில் புதிய யுக்தியை கையாண்டு, பத்திரிக்கைகளின் பதிப்பாளர்களிடமிருந்து முக்கிய சுற்றுலாத் தலங்கள் அடங்கிய வெளியீடுகள் மதிப்புக் கூட்டாக பெறப்பட்டன.

## 12.3 தமிழ்நாடு சுற்றுலா செய்தி மடல்

12.3.1 சுற்றுலா தொழில் சார்ந்தோருக்கு உரிய தகவல்களை வழங்க, மாதாந்திர செய்தி மடல் வெளியிடப்பட்டு வருகிறது. இவ்வெளியீடு இந்தியாவிலுள்ள மைய அரசு சுற்றுலா அலுவலகங்கள், நாடெங்குமுள்ள தமிழ்நாடு சுற்றுலா அலுவலகங்கள், பயணம் நடத்துபவர்கள், பயண முகவர்கள் மற்றும் விடுதி உரிமையாளர்கள் அனைவருக்கும் விநியோகிக்கப்படுகின்றன. சுற்றுலாத்துறையில் நடைபெறும் நிகழ்ச்சிகள் மற்றும் முக்கிய சுற்றுலா சார்ந்த நிகழ்வுகள் அனைத்தும் இம்மடலில் முன்னுரிமைப்படுத்தப்படுகின்றன.

12.3.2 தகவல் சேவையை மேம்படுத்த, சிறப்பு பதிப்புகளும், உயர் தொழில் நுட்பத்தில் உருவாகும் மின்னணு பொருட்களும் 2009–10 ஆம் ஆண்டில் தயாரிக்கப்படும்.

<u>மடிப்பேடுகள்:</u>

- அரசு அருங்காட்சியகம், சென்னை
- ஏலகிரி
- தமிழக கைவினை பொருட்கள்
- தமிழ்நாட்டின் கடற்கரைகள்
- தமிழ்நாட்டின் அருவிகள்
- மாவட்ட வாரியான சுற்றுலா மடிப்பேடுகள் தமிழில்



- மலை வாழிடங்கள் குறித்த சுவரொட்டிகள்
- கிராம வளம் குறித்த சுவரொட்டிகள்
- அருவிகள் குறித்த சுவரொட்டிகள்
- கடற்கரைகள் குறித்த சுவரொட்டிகள்
- பாரம்பரிய இடங்கள் குறித்த சுவரொட்டிகள்

## 12.4 துல்லிய மின்னணு கருவிகள்

மின்னணுப் பொருட்கள் பயன்பாட்டில், காலத்திற்கேற்றவாறு அண்மைக்கால மேம்பாடுகளை அறிந்து கொள்வதற்காக, சுற்றுலா அலுவலர்களுக்கு மடிக்கணினிகளும், துல்லிய நிழற்படக் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன. எல்.சி.டி. புரொஜெக்டர்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து சுற்றுலா அலுவலகங்களுக்கும், சுற்றுலா வளங்களை காட்சிக்கு வைப்பதற்காக, அனைத்து துணைப்பாகங்களுடன் கூடிய "காட்சி ஏற்பாடு முறை" அமைப்பதற்கு கருதப்படுகிறது.

## 12.5 விளம்பர முகாம்

தமிழ்நாட்டின் சுற்றுலா சிறப்பியல்புகளை, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் இரயில் மற்றும் சாலை பயணத் திட்டத்தை மையப்படுத்தி, 2008–09 ஆம் ஆண்டில் பெங்களூரு, கொல்கத்தா, லக்னோ, புது தில்லி, ஐதராபாத் மற்றும் ஜெய்ப்பூரில் நடத்தப்பட்ட சிறப்பு விளம்பர முகாம்கள் வாயிலாக அதிகமான சுற்றுலாப் பயணிகள் தமிழகத்திற்கு வந்தனர். இத்தகைய முகாம்கள் 2009–2010 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடத்தப்படும். விளம்பர முகாம்கள் ஏனைய மாநிலங்களில் உள்ள கீழ்க்கண்ட நகரங்களில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- ஆக்ரா – உத்திரப் பிரதேசம்
- ஜெய்ப்பூர் – ராஜஸ்தான்
- கொல்கத்தா – மேற்கு வங்காளம்
- மும்பை – மகாராஷ்டிரா

- ஐதராபாத் – ஆந்திர பிரதேசம்
- போர்ட் பிளேர் – அந்தமான் மற்றும் நிகோபர் தீவுகள்

**12.6 நட்புச் சுற்றுலா முகாம்**

**12.6.1** சுற்றுலா தொழில் புரிவோரிடையே தரமான வசதி மற்றும் சேவையை படிப்பிக்க "விருந்தினர் போற்றுதும்! விருந்தினர் போற்றுதும்!!" எனும் புதிய திட்டத்தை தமிழ்நாடு சுற்றுலா அறிமுகப்படுத்தியுள்ளது. சுற்றுலா தொழில் புரிவோர், விடுதி உரிமையாளர்கள், பயண முகவர்கள், சீருந்து மற்றும் ஆட்டோ ரிக்சா ஓட்டுநர்கள், வணிகர்கள், காவலர்கள், கோவில் பணியாளர்கள் மற்றும் விமான நிலைய பணியாளர்கள் ஆகியோர் முனைப்புடன் செயல்பட பயிற்சித் திட்டத்தை தமிழ்நாடு சுற்றுலா நடத்தியுள்ளது. இந்த பயிற்சித் திட்டங்கள், சென்னை, தர்மபுரி, சேலம், ஈரோடு, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், விழுப்புரம், கடலூர், கன்னியாகுமரி, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் நடத்தப்பட்டன. இதர சுற்றுலாத் தலங்களில் "விருந்தினர் போற்றுதும்! விருந்தினர் போற்றுதும்!!" முகாம்களை இவ்வாண்டு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்தகைய பயிற்சித் திட்டங்கள் மற்றும் தீவிர பிரச்சாரம் காரணமாக, பொது மக்களின் மனங்களில் சுற்றுலாவின் முக்கியத்துவத்தையும், சுற்றுலாப் பயணிகளை நட்புடன் நடத்துவதையும் பற்றிய விழிப்புணர்வு கணிசமான அளவிற்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**12.6.2** இதற்கு பெருமளவு வரவேற்பு கிடைத்துள்ளதால், இத்திட்டத்தை எல்லா மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். மாநிலத்தில் சுற்றுலா நட்புப் பண்பாட்டை வளர்க்க தீவிர விளம்பர முகாம் தொடங்கப்பட்டது. இது பொதுமக்களின் கவனத்தை ஈர்த்து சீரான பாதையில் அடியெடுத்து வைக்க உதவியது. இப்பிரச்சாரம் நுட்பமான சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், அதிசயமான வரலாற்று சின்னங்களை காக்கவும், அழகிய இடங்கள் அழிக்கப்படுவதை தடுக்கவும் உதவி செய்யும்.



***12.6.3 சுற்றுலா நட்பு வாகனம்***

'சுற்றுலா நட்பு வாகனம்' எனும் புதிய திட்டம், 2007–08 ஆம் ஆண்டு இம்மாநிலத்தில் தொடங்கப்பட்டது. சுற்றுலா நட்பு வாகனம் திட்டத்தில் சேர விரும்பும் ஆட்டோ ஓட்டுநர்களின் தகுதி, நன்னடத்தை குறித்த பின்னணி விவரங்கள் குறித்து காவல் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலகங்களில் சரிபார்க்கப்பட்டபின், இத்திட்டத்தில் பட்டியலிடப்பட்டனர். தெரிவு செய்யப்பட்ட ஓட்டுநர்களுக்கு, சுற்றுலாத்தலங்கள் குறித்தும், தகவல் தொடர்பு, மரியாதையான நடவடிக்கைகள் மற்றும் அது தொடர்பான பொருண்மைகளின் மீது உரிய பயிற்சி வழங்கப்பட்டது. சுற்றுலாப் பயணிகளுக்கு விநியோகிக்க சுற்றுலா வரைபடங்கள் மற்றும் கையேடுகள் அவர்களிடம் வழங்கப்பட்டுள்ளன.

சென்னையில் 39 ஆட்டோ ரிக்சாக்களுடனும், கன்னியாகுமரியில் 18 ஆட்டோ ரிக்சாக்களுடனும் முதற்கட்டமாக 'சுற்றுலா நட்பு வாகனம்' எனும் திட்டம் தொடங்கப்பட்டது. இரண்டாவது கட்டமாக, 24 ஆட்டோ ரிக்சாக்கள் சென்னையில் இணைந்தன. மூன்றாவது கட்டமாக, சென்னையில் 25, திருநெல்வேலியில் (குற்றாலம் வட்டம்) 28 மற்றும் மதுரையில் ஏழு ஆட்டோ ரிக்சாக்களும் இணைந்தன. இத்திட்டத்தில் இணைக்கப்பட்ட ஆட்டோ ரிக்சாக்கள் போக்குவரத்துத்துறையின் ஒப்புதலுடன் சுற்றுலாத் தலங்களின் புகைப்படங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

**12.7 தூய்மை முகாம்கள்**

தமிழ்நாடு 1058 கி.மீ. நீளமான கடற்கரையை உடையது. கடற்கரைகளை சுத்தமாகவும் சுகாதாரமாவும் வைக்க வேண்டும். நமது கடற்கரைகளை குப்பை கூளங்கள் இல்லாததாகப் பார்த்துக் கொள்ள வேண்டியது உள்ளூர்வாசிகளின் கடமையாகும். உள்ளாட்சி அமைப்புகளின் ஒத்துழைப்புடன் கடற்கரைகளின் தூய்மையைப்

பேண தமிழ்நாடு சுற்றுலா முயற்சிகளை எடுத்துள்ளது. 2008–09 ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொது மக்களின் நலன் கருதி மாமல்லபுரம், திருவரங்கம் மற்றும் சென்னையில் துாய்மை முகாம்கள் நடத்தப்பட்டன. உலகச் சுற்றுலா நாளன்று எல்லா மாவட்டங்களிலும் இது போன்ற முகாம்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில் நடைபெற்றன.

### 12.8 நிழற்படப் போட்டி

சுற்றுலா சிறப்பியல்புகளை எடுத்தியம்ப, சிறந்த நிழற்பட கலைஞர்கள் மூலம் சிறப்பான நிழற்படங்கள் பெற, "பெஸ்ட் போட்டோகிராபி" பத்திரிக்கையின் ஒத்துழைப்புடன் நிழற்படப் போட்டி நடத்தப்பட்டது.

## 13 கூட்டம், ஊக்கம், கருத்தரங்கு மற்றும் பொருட்காட்சி சந்தை

தமிழ்நாடு சுற்றுலா 2008–09 ஆம் ஆண்டில், சுற்றுச்சூழல் சுற்றுலா மேலாண்மை, மருத்துவ சுற்றுலா மற்றும் பொறுப்புணர்வு சுற்றுலா ஆகிய மூன்று கருத்தரங்குகள் மற்றும் கலந்தாய்வுகளை சென்னையில் நடத்தியது. தமிழ்நாட்டில், கூட்டம், ஊக்கம், கருத்தரங்கு மற்றும் பொருட்காட்சி உள்ளிட்ட 'மைஸ்' எனும் சந்தை, தமிழ்நாட்டின் சுற்றுலா வளத்தை விளம்பரப்படுத்த நடத்தப்படும்.

### 13.1 கருத்தரங்குகள் மற்றும் பணிப்பட்டறைகள் நடத்துதல்

#### 13.1.1 சுற்றுச்சூழல் சுற்றுலா மேலாண்மை வட்டாரப் பட்டறை

சென்னையில் 30.4.2008 அன்று தென் மாநில சுற்றுலா உயர் அதிகாரிகளும், சுற்றுலா தொழில் சார்ந்தோரும் கலந்து கொண்ட சுற்றுச்சூழல் சுற்றுலா மேலாண்மை வட்டாரப் பட்டறை நடத்தப்பட்டது.



அதில், தென்னிந்தியாவிலிருந்து சுற்றுலாத்துறையின் உயர் அதிகாரிகளும், சுற்றுலா ஆர்வலர்களும் கலந்து கொண்டனர். இதில் மென்மையான சுற்றுச்சூழலை பாதுகாத்து போற்றுதல் மற்றும் சுற்றுச்சூழல் பங்கமில்லா சுற்றுலா வளர்ச்சி குறித்து வலியுறுத்தப்பட்டது.

#### 13.1.2 மருத்துவ சுற்றுலா குறித்த பயிலரங்கு

சென்னையில் 18.7.2008 அன்று, மருத்துவ சுற்றுலா வலிமை பெறுவதை கருத்தில் கொண்டு, மருத்துவ சுற்றுலா பயிலரங்கம் நடத்தப்பட்டது. மருத்துவ வல்லுநர்கள் மற்றும் சுற்றுலா தொழில் புரிவோர் கலந்து கொண்ட பயிலரங்கு, அதில் கலந்து கொண்ட அனைவரின் பங்களிப்பைப் பெற்றது.

#### 13.1.3 சமூகப் பொறுப்புணர்வு சுற்றுலா குறித்த பயிலரங்கு

சுற்றுலாப் பயணிகளுக்கும், இளைய சமுதாயத்தினருக்கும் நமது கிராமங்களைப் பற்றி எடுத்துரைப்பது நம்முடைய பொறுப்பு என்பதால், தமிழ்நாடு சுற்றுலா, கிராமப்புறங்களின் வளர்ச்சிக்கு தொடர்ச்சியாக நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதனை வலியுறுத்த ஒரு பயிலரங்கு, சென்னையில் 2008 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடத்தப்பட்டது. இப்பயிலரங்கில் கிராமப்புறங்களை காப்பதில் உள்ளூர் மக்களுக்குள்ள பொறுப்பும், கடமையும், அவற்றை கண்டு களித்து பாதுகாப்பதில் சுற்றுலாப் பயணிகளின் பொறுப்பும் எடுத்தியம்பப்பட்டது.

### 13.2 வெளிநாட்டு சுற்றுலா சந்தைகளில் பங்கேற்றல்

#### 13.2.1 பசிபிக் ஆசியா பயணக் கருத்தரங்கு (PATA)

2007 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், இந்தோனேசியா நாட்டில் பாலி நகரில் நடைபெற்ற பாட்டா சந்தையில் தமிழ்நாடு சுற்றுலா பங்கேற்று, சுற்றுலாச் செல்வங்களையும், தமிழ்நாட்டில்

உலகத்தரம் வாய்ந்த குறைந்த செலவிலான மருத்துவ வசதிகளையும் எடுத்துக் கூறியது. பிற சுற்றுலா பயணத் திட்டங்களுடன், மருத்துவ சுற்றுலா பயணத்திட்டத்திற்கும் வெளிநாடுகளிலிருந்து பெரும் வரவேற்பு உள்ளது. 2008 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், ஐதராபாத்தில் நடைபெற்ற பாட்டா சந்தையில் தமிழ்நாடு சுற்றுலா பங்கேற்று, நமது மாநிலத்தில் உள்ள சுற்றுலா செல்வங்களை உயர் தொழில் நுட்ப ரீதியில் எடுத்துக் கூறியது. தமிழ்நாடு சுற்றுலா அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்ட கிராமிய நடன நிகழ்ச்சி, இந்நிகழ்வின் கண்கொள்ளா காட்சியாக அமைந்தது.

### 13.2.2 உலக சுற்றுலாப்பயணச் சந்தை

ஒவ்வொரு நவம்பர் மாதத்திலும் லண்டனில், உலக சுற்றுலாப்பயணச் சந்தை நடைபெறுகிறது. 2007 ஆம் ஆண்டு இலண்டன் நகரில் நடைபெற்ற உலக சுற்றுலா சந்தையில் தமிழ்நாடு சுற்றுலா பங்கேற்றது. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் பங்கு கொண்டது. தமிழ்நாட்டின் சுற்றுலா செல்வங்களும், சுற்றுலா வளர்ச்சிக்கு தமிழ்நாடு சுற்றுலாவின் முயற்சிகளும் முக்கியப்படுத்தப்பட்டன. 2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இலண்டன் நகரில் நடைபெற்ற உலக சுற்றுலா சந்தையில் தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா தொழில் புரிவோர் கலந்து கொள்ள தமிழ்நாடு சுற்றுலா ஊக்கமளித்து, அவர்களுக்குத் தேவையான அச்சிட்ட மற்றும் மின்னணு சுற்றுலா பொருட்கள் வழங்கி உதவியது. இதனால் இங்கிலாந்து மற்றும் சுற்றியுள்ள நாடுகளிலிருந்து கணிசமான அளவு சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டிற்கு வருகை தந்தனர்.

### 13.2.3 சர்வதேச சுற்றுலா சந்தை (ITB)

2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பெர்லின் நாட்டில் ஜெர்மனி நகரில் நடைபெற்ற சர்வதேச சுற்றுலா சந்தையில் தமிழ்நாடு சுற்றுலா பங்கேற்றது. தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு வகையான சுற்றுலா முக்கியத்துவங்களை இச்சந்தையில் கலந்து கொண்ட முக்கிய



பிரமுகர்களிடையே காண்பிக்க இச்சந்தை உதவியது. வெளிநாட்டவரிடையே நடந்த கலந்தாய்வு மிகவும் உபயோகமாக இருந்தது. மேலும் அவர்கள் பயணக்குழுவை தமிழ்நாட்டிற்கு அனுப்புவதில் மிகவும் ஆர்வம் காட்டினர். தமிழ்நாடு சுற்றுலா அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்ட கலை நிகழ்ச்சி அனைவரையும் கவர்ந்தது.

13.2.4 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் வரவழைக்க, தமிழ்நாடு சுற்றுலா பின்வரும் வெளிநாட்டு சுற்றுலா சந்தைகளில் பங்கேற்க முடிவெடுத்துள்ளது.

1. பசிபிக் ஆசிய பயண முகவர் மாநாடு
2. உலக சுற்றுலாப்பயணச் சந்தை, லண்டன்
3. ஐ.டி.பி., பெர்லின்
4. இந்திய சுற்றுலா மற்றும் அங்காடித் திருவிழா, மலேசியா
5. இந்திய சுற்றுலா மற்றும் அங்காடித் திருவிழா, துபாய் (ஐக்கிய அரபு நாடுகள்)

## 13.3 தேசிய சுற்றுலா சந்தைகளில் பங்கேற்றல்

### 13.3.1 இந்திய பயண முகவர்கள் சங்க மாநாடு

சுற்றுலாப் பயணிகள் வருகையை அதிகரிக்க, தமிழ்நாடு சுற்றுலா 5.10.2007 முதல் 8.10.2007 முடிய சென்னையில் நடைபெற்ற இந்திய பயண முகவர்கள் சங்க மாநாட்டை ஒருங்கிணைந்து நடத்தியது.

13.3.2 அனைத்து மாநகரங்களிலும் (metros), முக்கிய சுற்றுலாத் தலங்களான ஆக்ரா, ஜெய்ப்பூர் மற்றும் பனாஜி ஆகிய இடங்களில் சுற்றுலா அலுவலகங்களை இயக்குவதை தமிழ்நாடு சுற்றுலா பெருமையாகக் கருதுகிறது. தமிழ்நாட்டை சுற்றுலாப் பயணிகளைக் கவரும் மாநிலமாக ஆக்கவும், பல வகையான

சுற்றுலாப் பொருட்களுக்கு, பல்வேறு இடங்களில் உள்ள போட்டிகளை சமாளிக்கவும், சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழ்நாட்டின் பங்கை உயர்த்தவும், சுற்றுலா அலுவலகங்களைத் தவிர சுற்றுலா தகவல் மையங்களையும் பல்வேறு மாநிலங்களில் தமிழ்நாடு சுற்றுலா சேவைகளை சந்தைப்படுத்த அமைத்துள்ளது.

**13.3.3** இந்த நோக்கம் ஒருங்கிணைந்த சந்தை வினைமுறைத் திறம் மற்றும் பயணத் தொழில் புரிவோரின் கூட்டு முயற்சியுடன் நடத்தப்படும் முகாம்கள் மூலம் நிறைவேற்றப்படுகிறது. பெரும்பாலான சுற்றுலாப்பயணச் சந்தைகளிலும், பிற மாநில சுற்றுலாத்துறை மற்றும் சுற்றுலா ஆர்வலர்களால் நடத்தப்படும் சுற்றுலா கண்காட்சிகளிலும் தமிழ்நாடு சுற்றுலா பங்கேற்றுள்ளது.

**13.3.4** 2009 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில், சென்னையில் நடைபெற்ற வெளிநாடு வாழ் இந்தியர் தின விழாவில் தமிழ்நாடு சுற்றுலா பங்கேற்று நடத்திய கலாச்சார விழாவில் தமிழ்நாட்டிலுள்ள கலைகள் மற்றும் கவின்கலைகள் இடம் பெற்றன.

**13.3.5** தெற்காசிய பயண மற்றும் சுற்றுலா கண்காட்சி, புது தில்லி – உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாங்குவோர்–விற்போர் சந்திப்பை பெற தமிழ்நாடு சுற்றுலா, தெற்காசிய பயண மற்றும் சுற்றுலா கண்காட்சியில் (சாத்தே) தொடர்ந்து கலந்து கொள்கிறது.

**13.3.6** மாபெரும் இந்திய பயண அங்காடி, ஜெய்ப்பூர் – ஜெய்ப்பூரில் இந்திய வணிக நிறுவனங்களின் கூட்டமைப்பு ஏற்பாடு செய்த மாபெரும் இந்திய பயண அங்காடியில் தமிழ்நாடு சுற்றுலா கலந்து கொண்டது. இதில் வாங்குபவர்–விற்பவர் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டதால், இதற்கு பெரும் வரவேற்பு கிடைத்தது.



## 14 பொருட்காட்சிகளும், விழாக்களும்

**14.1** தமிழ்நாட்டின் வளமான பாரம்பரிய கலாச்சாரம் உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் புகழ் பெற்றுள்ளது. மக்களின் வாழ்க்கையில் இசை, நடனம் மற்றும் நாடகம் ஒரு இன்றியமையாத அங்கமாக விளங்குகின்றன. ஆண்டு முழுவதும் பல்வேறு கலாச்சார பொருட்காட்சிகள் மற்றும் விழாக்களை நடத்தி அதில் பங்கு கொள்வதில் இங்குள்ள மக்கள் மிகவும் ஆர்வம் காட்டுகின்றனர். இம்மாநிலத்தின் கலாச்சார நிகழ்வுகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை பெரிதும் கவர்கிறது. திருவிழாக்கள் கோலாகலமாக ஆரவாரத்துடன் கொண்டாடப்படுகின்றன.

**14.2** 2008–2009 ஆம் ஆண்டில், தமிழ்நாடு சுற்றுலா, சுற்றுலா விழாக்களையும், பிற விழாக்களில் சுற்றுலா நிகழ்ச்சிகளையும் பின்வருமாறு ஏற்பாடு செய்தது.

### 14.2.1 மைய அரசு நிதியுதவியில் நடத்தப்பட்ட விழாக்கள்

- இந்திய நாட்டிய விழா, மாமல்லபுரம் – டிசம்பர் / ஜனவரி
- தேசிய சுற்றுலா மற்றும், கலாச்சார விழா, கன்னியாகுமரி – ஜனவரி
- தேசிய புனித விழா, இராமேசுவரம் –ஜனவரி / பிப்ரவரி

### 14. 2. 2 மாநில அரசு நிதியில் நடத்தப்படுபவை

- நாடு முழுவதும் பொங்கல் சுற்றுலா விழா – ஜனவரி
- சித்திரை விசு விழா, பாபநாசம் – ஏப்ரல்
- தேயிலை மற்றும் சுற்றுலா விழா, உதகமண்டலம் – ஏப்ரல்
- சித்திரை நாட்டிய விழா, மதுரை – மே
- சித்திரை முழு நிலவு விழா, பூம்புகார் – மே
- கட்டபொம்மன் விழா, பாஞ்சாலங்குறிச்சி – மே

- சலங்கை நாதம் மற்றும் பாகவத மேளா, தஞ்சாவூர் – மே
- மாங்கனி விழா, கிருஷ்ணகிரி – மே
- எல்லா மலை வாழிடங்களில் கோடை விழா – மே
- கந்தூரி விழா, நாகூர் – மே
- சாரல் திருவிழா, குற்றாலம் – ஜுலை
- திற்ப்பரப்பு விழா, கன்னியாகுமரி மாவட்டம் – ஜுலை
- ஆடிப்பெருக்கு விழா, ஒகேனக்கல் – ஜுலை
- வேளாங்கன்னி விழா, வேளாங்கன்னி – ஆகஸ்ட்
- எல்லா சுற்றுலாத்தலங்களிலும் உலக சுற்றுலா தினம் –செப்டம்பர்
- சதய விழா, தஞ்சாவூர் –அக்டோபர்
- திருவண்ணாமலை தீபத்திருவிழா – நவம்பர்

**14.3** தமிழ்நாடு சுற்றுலா மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் வேலூாில் நடைபெறும் அரசுப் பொருட்காட்சிகள் அனைத்திலும் கலந்து கொண்டு, தமிழ்நாட்டின் சுற்றுலா வளத்தையும், மாவட்டங்களில் அதிகம் பிரபலமடையாத தலங்கள் குறித்தும் எடுத்துக் கூறியது . சுற்றுலா மற்றும் பயணச் சந்தைகள் மற்றும் நாடெங்கும் நடத்தப்பட்ட பொருட்காட்சிகளில் தமிழ்நாடு சுற்றுலா கலந்து கொண்டு மாநிலத்தில் உள்ள வளமான சுற்றுலா முக்கியத்துவங்களை சிறப்புக்கூறாக சித்தரிக்கிறது.

### 14.3 உலக சுற்றுலா தின கொண்டாட்டங்கள்

சுற்றுலாவில் கிராமிய சுற்றுலா முக்கிய அம்சமாக திகழ்கிறது. தமிழ்நாட்டில் அதிசயக்கத்தக்க கிராமிய சுற்றுலாக்கூறுகள் உள்ளன. 2008 உலக சுற்றுலா தினத்தின் "சூழல் மாற்றத்தின் எச்சவாலையும் சுற்றுலா ஏற்கிறது" எனும் கருப்பொருளை சித்தரிக்கும் விதமாக உலக சுற்றுலா தின கொண்டாட்டங்களில் கிராமிய சுற்றுலா கருத்து வலியுறுத்தப்பட்டது. தூய்மைப்படுத்தும் முகாம், சுற்றுலா விழிப்புணர்வு முகாம் மற்றும் சுற்றுலா நட்பு முகாம் ஆகியன



சென்னை மற்றும் ஏனைய மாவட்டங்களிலுள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களில் நடத்தப்பட்டன.

### 14.5 இந்திய நாட்டிய விழா – 2009

**14.5.1** 1992 ஆம் ஆண்டு முதல் டிசம்பர் – ஜனவரி மாதங்களில் உள்ளூர் கலைஞர்களின் திறனை போற்றும் முகமாக மாமல்லபுரத்தின் அழகிய கடற்கரையோரம் நாட்டிய விழாவை தமிழ்நாடு சுற்றுலா நடத்தி வருகிறது. இவ்விழாவின் பெருமையை அறிந்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை வருடத்திற்கு வருடம் உயர்ந்து வருகிறது. இதனை மனதில் கொண்டு இவ்வாண்டு இவ்விழா இந்திய நாட்டிய விழாவாக 2008 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 25 ஆம் நாள் முதல் 2009 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 25 ஆம் நாள் வரை, நாட்டிலுள்ள சிறந்த கலைஞர்களுக்கு வாய்ப்பு தந்து, சுற்றுலாப் பயணிகளுக்காக நடத்தப்பட்டது. இந்திய நாட்டிய விழாவாக இவ்வாண்டு கொண்டாடப்பட்ட மாமல்லபுரம் நாட்டிய விழாவில் பல்விதமான இந்திய நுண்கலைகள் மற்றும் நடன வகைகள் சரியான முறையில் தெரிவிக்கப்பட்டது. தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம், கர்நாடகா, புதுச்சேரி, ஜார்கண்ட், நாகலாந்து, மணிப்பூர், ராஜஸ்தான், ஒரிசா, மிசோரம், சிக்கிம், அஸ்ஸாம் மற்றும் அருணாசலப்பிரதேசம் ஆகிய இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து சிறந்த கலைஞர்கள் மாமல்லபுரம் கடற்கரைப்பரப்பில் ஒருங்கு திரண்டனர். தென்மண்டல பண்பாட்டு மையம், கலை–பண்பாட்டுத் துறை மற்றும் சென்னை அரசினர் இசைக் கல்லூரி ஆகியவை ஒருங்கிணைந்து பல்வேறு நடன நிகழ்ச்சிகளை வழங்கின.

**14.5.2** தமிழகத்தின் பல்வகை கலைகள் மற்றும் கிராமிய கலைகள் உள்ளடக்கிய 'பண்பாட்டுச் சங்கமம்' துவக்க நிகழ்வு நிகழ்த்தப்பட்டது. இதில் சிறந்த பலவகையான இசை நடன நிகழ்ச்சிகள் காண்போருக்கு விருந்தாக்கப்பட்டது.

14.5.3 இனிவரும் ஆண்டுகளில், மேற்கண்ட விழாக்கள் தவிர, மகாகவி சுப்பிரமணிய பாரதியார் மற்றும் உமறுப்புலவர் ஆகியோர் பிறந்த இடமான எட்டயபுரத்தில் முத்தமிழ் விழாவும் நடத்தப்படும்.

### 14.6 பண்பாட்டு விழா

டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில், சென்னை, பல பண்பாட்டு இசை நடன நிகழ்ச்சிகளால் பொலிவுறுகிறது. குறிப்பாக "சென்னை சங்கமம்" எனும் மாபெரும் விழா சுற்றுலாப் பயணிகளையும், சென்னைவாசிகளையும் பெரிதும் கவர்கிறது. ஒரு வாரம் நடத்தப்பட்ட விழாவில் 2000க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கு கொண்டனர். இவ்விழா இசையையும், பாடல்களையும் சென்னையின் மூலை முடுக்குகளிலெல்லாம் ஒலிக்கச்செய்தது.

## 15 கணினிமயமாக்கம் மற்றும் மேற்பார்வை

சுற்றுலாப்பயணிகள் பயன்பெற வேண்டும் என்பதற்காக, கடந்த சில ஆண்டுகளில், தகவல் தொழில்நுட்பத்தில் பெரிய முயற்சிகளை தமிழ்நாடு சுற்றுலா எடுத்துள்ளது. இம்முயற்சியின் நோக்கம் கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

- மேம்பட்ட தமிழ்நாடு சுற்றுலா சேவைகள்
- மேம்பட்ட சுற்றுலா தகவல்

### அ) மேம்பட்ட தமிழ்நாடு சுற்றுலா சேவைகள்

1) கணினி பயன்பாடு

மேம்பட்ட மற்றும் திறமையான சேவைபுரிய, தலைமை அலுவலகத்தில் இணை இயக்குநர் வரையிலும், கள அலுவலகங்களிலும் கணினி பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மற்றும் வெளி மாநிலங்களிலுள்ள தமிழ்நாடு சுற்றுலா



அலுவலகங்களுக்கும் கணினி வழங்கப்பட்டுள்ளது. கணினி மேம்பாடு தொடர்ந்து செய்யப்பட்டு வருகிறது.

2) மின்னஞ்சல் மற்றும் இணையதளம்

விரைவான தகவல் பரிமாற்றத்திற்கும், பிற பணிகளுக்குமாக மின்னஞ்சல் மற்றும் இணையதள வசதி தலைமை அலுவலகத்தில் அனைத்து பணியாளர்களுக்கும், தமிழ்நாடு சுற்றுலா அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

3) திட்ட கண்காணிப்பு முறை

மைய, மாநில அரசு திட்டங்களின் விபரங்களை மேற்பார்வையிடுதல், மேம்படுத்துதல் மற்றும் விபரங்களை பதிவு செய்தல் போன்றவற்றிற்காக திட்ட கண்காணிப்பு முறை திட்டப்பிரிவிற்காக உருவாக்கப்பட்டது. முறையாக நாளது வரையிலாக்கப்பட்டு வருகிறது.

### ஆ) மேம்பட்ட சுற்றுலா தகவல்

சுற்றுலாப் பயணிகள், சுற்றுலா மேம்பாட்டு முகவரமைப்புகள், ஊடகங்கள் மற்றும் ஏனையோருக்கும் இம்மாநிலத்திலும் பிற மாநிலங்களிலும் தரமான சுற்றுலா தகவல், வசதிகள் மற்றும் சேவைகளை வழங்கும் வகையில் பல முனைவுகள் எடுக்கப்பட்டுள்ளன. எடுக்கப்பட்ட சில முக்கியமான நடவடிக்கைகள் வருமாறு:–

i) வலைதளம்:www.tamilnadutourism.org – முக்கிய தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டு தளம்

ii) வலைதளம்:www.ttdconline.com – தமிழ்நாடு சுற்றுலா சேவைகளை பதிவு செய்ய உருவாக்கப்பட்ட தளம்

## 16 சுற்றுலா விருதுகள்

16.1 தமிழ்நாடு சுற்றுலா 2006–2007 ஆம் ஆண்டில் பின்வரும் மூன்று தேசிய சுற்றுலா விருதுகளை மைய அரசு சுற்றுலா

அமைச்சகத்திடமிருந்து சிறந்த பணிகளுக்காக பெற்றுள்ளது.

அ) சிறந்த கிராமிய சுற்றுலாத்திட்டம்

ஆ) சிறந்த ஒருங்கிணைந்த சுற்றுலா வர்த்தக விளம்பரம்

இ) சிறந்த தன்னார்வ தொண்டு நிறுவனம்

**16.2** 2007–2008 ஆம் ஆண்டிலும், சிறந்த ஒருங்கிணைந்த வர்த்தக விளம்பரத்திற்காக தேசிய சுற்றுலா விருதினை பெற்றுள்ளது.

**16.3** இது தவிர, 2007–2008 ஆம் ஆண்டில் முன்னணி சுற்றுலா வெளியீடுகளிடமிருந்து பின்வரும் விருதுகளையும் பெற்றுள்ளது.

அ) டுடேஸ் டிராவலரின் 10வது ஆண்டு நிறைவு விழாவினை ஒட்டி கலாச்சார சுற்றுலா விருது

ஆ) சிஎன்பிசி ஆவாஜ் டிராவல் – ஊட்டி சிறந்த வார இறுதி சுற்றுலாத்தலம் (தெற்கு) 2008 ஆம் ஆண்டின் விருது

இ) ஆஸ்பிடாலிடி இந்தியா மற்றும் எக்ஸ்புளோர் தி வோர்ல்டு அனுவல் இண்டர்நேசனல் வழங்கிய, சுற்றுலா மேம்பாட்டில் இந்தியாவின் சிறந்த மாநிலம் 2008 ஆம் ஆண்டின் விருது

ஈ) பட்வா விருது

## 17 நிதி ஒதுக்கீடு

சுற்றுலாப்பயணிகளின் தேவையை பூர்த்தி செய்ய மைய, மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் கட்டமைப்பு வசதிகளான ஓய்விடங்கள், கழிப்பிடங்கள், வாகன நிறுத்துமிடம், குடிநீர் வசதி, சாலை வசதி, சுகாதார வசதிகள் முதலியவை செய்யப்பட்டுள்ளது.

கடந்த மூன்றாண்டுகளில் கட்டமைப்பு வசதிகளுக்காக வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடு விபரம் கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

2006–2007 ரூ.63.57 கோடி
2007–2008 ரூ.51.53 கோடி
2008–2009 ரூ.62.04 கோடி



# தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

1956 ஆம் ஆண்டு கம்பெனி சட்டத்தின் கீழ் 1971 ல் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கம்பெனியாக பதிவு செய்யப்பட்டது. குறிப்பாக பிரபலமாகாத சுற்றுலாத் தலங்கள் உள்பட சுற்றுலா இடங்களில் சுற்றுலா தொடர்பான அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதும் இதில் அடங்கும். வர்த்தக ரீதியில் சுற்றுலாவை மேம்படுத்தவும், கட்டமைப்பு, அடிப்படை வசதிகளை விரிவுபடுத்தவும் ஐந்து உணவகங்கள் மற்றும் இரண்டு சொகுசு பேருந்துகளுடன் எளிய முறையில் இக்கழகம் தொடங்கியது. தற்போது இது நன்கு வளர்ந்து 55 ஓட்டல்கள் மற்றும் 24 சொகுசு பேருந்துகளோடு இயங்கி வருகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இம்மாநிலத்திலுள்ள அனைத்து முக்கிய சுற்றுலா மையங்களிலும் சுற்றுலா பயணிகள் வசதிக்காக இளைஞர் விடுதிகள், உணவகங்கள், படகு இல்லங்கள், தொலைநோக்கி இல்லங்கள், ஏரி பூங்காக்கள், பெட்ரோல் பங்க் போன்ற வசதிகளை உருவாக்கியுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு உள்ளிட்ட முக்கிய சுற்றுலாத்தலங்களில் இளைஞர் விடுதிகளை நடத்தி வருகிறது. இங்கு சாதாரண சுற்றுலாப் பயணிகள், கோடைக்காலத்திலும் குறைந்த செலவில் தங்கும் வகையில் வசதி செய்யப்பட்டுள்ளது.

### 1 நிதி சாதனை

(ரூபாய் கோடியில்)

| வரிசை எண் | பொருள் | 2007– 2008 | 2008 – 2009 | வளர்ச்சி விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | விற்பனை அளவு | 55.04 | 69.00 | 25 |
| 2. | நிகர இலாபம் | 4.43 | 9.50 | 114 |

உலகப் பொருளாதார வீழ்ச்சியும், மும்பையில் வெடிகுண்டு சம்பவமும் இந்நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகள் வருகையை பாதித்த

போதிலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மொத்த வியாபாரத் தொகை மற்றும் ஆதாயம் கணிசமான அளவுக்கு அதிகரித்துள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஓட்டல் பிரிவிலும், போக்குவரத்து பிரிவிலும் பல்வேறு முயற்சிகளை எடுத்ததன் மூலம் ஆதாயம் கணிசமான அளவுக்கு அதிகரித்துள்ளது.

**1.1** ஊராட்சித் தலைவர்களுக்கு ஊரக வளர்ச்சித் துறை நடத்திய பயிற்சித் திட்டத்தின் ஓர் அங்கமாக சிறப்பு பயணத்திட்டம் நடத்தப்பட்டது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் விடுதிகள் மற்றும் சொகுசுப் பேருந்துகளை பயன்படுத்திக் கொண்டு, மதுரை, கோயம்புத்தூர், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் யுனிசெஃப் மூலம் கல்வித் துறை சிறப்புப் பயிற்சி பயிலரங்குகளை நடத்தியது. பழைய பேருந்துகளுக்குப் பதிலாக அதி நவீன உயர்தொழில்நுட்ப வசதியுள்ள பேருந்துகள் வாங்கப்பட்டன. புதிய பயணத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இரயில் மற்றும் பேருந்து பயணத்திட்டத்தை வர்த்தகப்படுத்த தீவிர விளம்பர முகாம்கள் நடத்தப்பட்டன. இதனால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் விடுதிகள் மற்றும் பேருந்து பிரிவுகளின் செயல்பாடுகளில் முன்னேற்றம் ஏற்பட்டது.

**1.2** நவீன படகுகள் கோடைக்காலத்திற்கு முன்பாக வழங்கப்பட்டதால், படகுப் பிரிவில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஒட்டுமொத்த இலாபத்தில் முன்னேற்றம் ஏற்பட்டது.

**1.3** முக்கிய விடுதிகள் மேம்பாடு கடந்த இரண்டு ஆண்டுகளில் செய்யப்பட்டதன் காரணமாக, விடுதிகளில் தங்குவோரின் சதவீதம் 2005–06 ஆம் ஆண்டில் 50 விழுக்காட்டிலிருந்து 2008–09 ஆம் ஆண்டில் 62 விழுக்காடாக உயர்ந்துள்ளது.



## 2. ஓட்டல்களை தனியாருக்கு குத்தகைக்கு விடுதல்

அரசு 31 ஓட்டல்களுக்கும் 10 உணவகங்களுக்கும் தனியுரிமை வழங்க ஒப்புதலளித்தது. இக்கழகம், இந்நாள் வரை 24 ஓட்டல்களுக்கும் 7 உணவகங்களுக்கும் தனியுரிமை அளித்துள்ளது. எஞ்சிய ஓட்டல்கள் மற்றும் உணவகங்களுக்கு தனியுரிமை அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தனியுரிமை அளித்ததன் மூலம் ஈட்டிய வருவாய், எஞ்சிய ஓட்டல்கள் மற்றும் உணவகங்கள் மேம்பாட்டிற்கு உபயோகிக்கப்படுகிறது.

## 3. இந்திய சுற்றுலா–அண்ணா நூற்றாண்டு தொழில் பொருட்காட்சி

**3.1** பேரறிஞர் அண்ணா அவர்களின் நூறாவது பிறந்த நாளை நினைவு கூறும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 35து இந்திய சுற்றுலா அண்ணா நூற்றாண்டு பொருட்காட்சி தொடங்கி வைக்கப்பட்டது. இப்பொருட்காட்சி சென்னை மாநகர குடிமக்களை பெரிதும் கவர்ந்திழுத்துள்ளது. 20 நாட்களில் 6.39 இலட்சம் மக்கள் பொருட்காட்சிக்கு வருகை தந்தனர். இது கடந்த ஆண்டு எண்ணிக்கையான 4.30 இலட்சத்தை விட 2 இலட்சம் அதிகமாகும். இதுவரை இல்லாத அளவில் சுமார் 17 இலட்சம் பார்வையாளர்கள் இவ்வாண்டு கண்டு களித்தனர். கடந்த ஆண்டு இந்த எண்ணிக்கை 14 இலட்சமாகும். இப்பொருட்காட்சியில் ஈட்டிய ஆதாயம் ரூ.2.02 கோடியாக அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு ஈட்டிய ஆதாயம் ரூ.1.52 கோடி ஆகும்.

- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சென்னை தீவுத் திடலில் 2008 மே மாதம் 1 ந் தேதி முதல் ஜுன் 7ந் தேதி வரை பனிமழை கண்காட்சி நடைபெற்றது. இதில் ரூ. 70 இலட்சம் வருவாய் கிடைத்துள்ளது.
- சென்னை தீவுத் திடலில் நவராத்திரி விடுமுறையில் அக்டோபர் 2008ல் உணவுத்திருவிழாவை நடத்தியது.

இதன் மூலம் ரூ 4.00 இலட்சம் வருவாய் கிடைத்தது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனியார் பங்கேற்புடன் நடத்திய இப்பொருட்காட்சிகளைத்தவிர, தனியார் பொருட்காட்சிகள் நடத்த தீவுத்திடல் வாடகைக்கு விடப்பட்டது.

- கோயம்புத்தூர் சிறைச்சாலை மைதானத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நிகழ்ச்சி மேலாளர் மூலம் ஆகஸ்டு–செப்டம்பர் 2008 மாதங்களில் நுகர்வோர் திருவிழா நடத்தியது. இதன் மூலம் ரூ. 19.00 இலட்சம் வருவாய் ஈட்டியது.

3.2 பொருட்காட்சி நடைபெறாத காலங்களான ஏப்ரலிலிருந்து நவம்பர் வரை இது போன்ற நிகழ்ச்சிகளை நடத்தியதன் மூலம் ரூ. 1.18 கோடி இலாபம் கிடைத்துள்ளது. இது, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக வரலாற்றில் இதுவரை இல்லாத ஒன்றாகும். மேலும், 2003–04 ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட அதிக வருமானமாக கருதப்பட்ட ரூ.44.00 இலட்சத்தைவிட இது கூடுதலாகும்.

## 4. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தில் மின்னணு ஆளுமை

- இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தில் இணையதளம் மூலம் நேரடி முன் பதிவு செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இணையதளப் பதிவு மூலம் 2004–2005ம் ஆண்டில் ரூ. 14.97 இலட்சமாக இருந்த வருவாய், 2008–2009ம் ஆண்டில் ரூ. 138.70 இலட்சமாக உயர்ந்துள்ளது.
- கணினி தொழில் நுட்பத்தில் மதிப்புக் கூட்டப்பட்ட சேவையின் மூலமாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் விடுதிகள் பயன்பாட்டிலும், பயணங்கள் செயல்பாட்டிலும் கூடுதல் வருமானத்தை ஈட்டியுள்ளது. ஸ்பெயின், அமெரிக்க ஐக்கிய நாடுகள், லண்டன், பிரான்ஸ், ஆஸ்திரேலியா, பின்லாந்து, கனடா, நார்வே, ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான்,



நெதர்லாந்து, சிங்கப்பூர், சீனா, துபாய், மொரீசியஸ், மலேசியா, இலங்கை, தென் ஆப்பிரிக்கா ஆகிய 70க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து சுற்றுலாப்பயணிகள் கணினி உபயோகம் மூலம் உடனடியாக விடுதிகள் மற்றும் பயணத்திட்டங்கள் குறித்த பதிவுகளை செய்துள்ளனர். மாதந்தோறும் 1,00,000 சுற்றுலாப் பயணிகள் இந்த வலைதளத்தை பார்க்கின்றனர். தினந்தோறும் 90–100 மின்னஞ்சல் பெறப்படுகிறது.

- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் தனது வலைதளத்தில் http://tamilnadutourism.org சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக சுற்றுலாத்தலங்களின் தகவல்கள், விடுதிகள், பொருட்காட்சிகள் மற்றும் விழாக்கள், கலை மற்றும் பண்பாடு முதலிய விபரங்களைச்சேர்த்து சீரமைத்தது. வலைதளத்தை 2008–09 ஆம் ஆண்டில் 6.74 இலட்சம் நபர்கள் பார்வையிட்டுள்ளனர். கடந்த ஆண்டு (2007–08) 5.27 இலட்சம் நபர்கள் பார்வையிட்டுள்ளனர்.
- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் 12 ஓட்டல்களுக்கான முன்பதிவினை தமிழக சுற்றுலாப்பயணிகள் மட்டுமின்றி, சென்னை புதுதில்லி, மும்பை மற்றும் கொல்கத்தா விற்பனை மையங்களில் இணைய தளம் மூலம் முன் பதிவு முறையை வெளிமாநில மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளும் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம், முதலமைச்சர் பொது நிவாரண நிதி தொகையை வலைதளம் www.ttdconline.com/cmprf.htm மூலம் செலுத்தத் தேவையான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. இதன் மூலம் ரூ. 11.54 இலட்சம் சேர்க்கப்பட்டுள்ளது.

## 5. அய்யன் திருவள்ளுவர் சிலை

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், 2002ம் ஆண்டு ஜுலை மாதத்தில் இருந்து கன்னியாகுமரியிலுள்ள அய்யன் திருவள்ளுவர்

சிலை பராமரிப்பு பணியை ஏற்றுக் கொண்டது. பல மேம்பாட்டுப் பணிகளான சிலையைச் சுற்றிலும் கிரானைட் தளம் அமைத்தல், நடைபாதை சீரமைப்பு போன்றவை மேற்கொள்ளப்பட்டன. 2008–2009–ஆம் ஆண்டு ரூ. 90.00 இலட்சம் செலவில் சிலை பாதுகாப்பிற்கு பாலிசிலிகான் இரசாயன பூச்சு பூசப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகள் கடற்கரையிலிருந்து திருவள்ளுவர் சிலைக்குச் செல்வதற்கு ரூ. 210 இலட்சம் செலவில் 2008–2009 ஆம் ஆண்டில் இரண்டு நவீன கப்பல்கள் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் மைய சுற்றுலாத் துறையின் பங்களிப்புடன் வாங்கப்பட்டு உபயோகத்தில் உள்ளன.

## 6. வர்த்தக மேம்பாட்டு நடவடிக்கைகள்

- டெல்லி, ஜெய்ப்பூர், கொல்கத்தா, அகமதாபாத், லக்னோ மற்றும் ஐதராபாத்தில் சாலையோர காட்சி விளக்கங்கள் மற்றும் விளம்பர முகாம்கள் நடத்தப்பட்டன.
- முதலியார் குப்பம் படகு குழாமில் வாழைப்பழ வடிவ படகுகளும், விரைவுப்படகும் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆகஸ்டு–2008ல் முதலியார்குப்பம் மழைத்துளி படகு குழாமில் நீர் விளையாட்டுகளை பிரபலப்படுத்த படகு போட்டிகள் நடத்தப்பட்டன .
- இந்நடவடிக்கைகளினால் முதலியார்குப்பத்திலுள்ள படகு இல்லத்திற்கு நல்ல வருவாய் கிடைக்கப்பெற்று 109 விழுக்காடு வளர்ச்சி அடைந்துள்ளது. கடந்த ஆண்டு விற்பனை அளவு 18.28 இலட்சத்துடன் ஒப்பிடும்போது, இவ்வாண்டு ரூ. 38.13 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது.
- 2008 ஆம் ஆண்டு ஜுலை மாதம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தங்க அட்டை மற்றும் பிளாட்டினம் அட்டை திட்டத்தை துவக்கி வைத்தார். தங்க அட்டை உறுப்பினர், கட்டணம் ரூ.1,000 செலுத்தி மூன்றாண்டுகள் வரையிலும், பிளாட்டினம் அட்டை உறுப்பினர், கட்டணம் ரூ.5,000 செலுத்தி பத்தாண்டுகள் வரையிலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகளில் 20 விழுக்காடு வரை கட்டணச்சலுகையை பெற முடியும். இது வரை 201 தங்க அட்டைகளும், 19 பிளாட்டினம் அட்டைகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன.
- இணையதளம் மூலம் தங்கம் மற்றும் பிளாட்டினம் அட்டைகள் பெற இயலும். சுற்றுலாப் பயணிகள் தங்கள் புகைப்படங்களை கணினியில் பதிந்து இவ்வட்டைகளைப் பெற முடியும்.

## 7. 2008– 2009ல் இதர வர்த்தக முயற்சிகள்

- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் பழைய 4 பேருந்துகளை மாற்றி புதிய உயர் தொழில்நுட்ப சொகுசுப் பேருந்துகளை வாங்கியுள்ளது. கடந்த இரண்டாண்டுகளில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 16 பேருந்துகளை ரூ. 4 கோடி செலவில் வாங்கியுள்ளது. இதன் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பழைய பேருந்துகளை பயன்படுத்தி வந்த நிலையை மாற்றி புதிய சொகுசு பேருந்து வாங்கப்பட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு கூடுதல் வசதிகளுடன் பயணம் இனிமையாக அமையும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- மாமல்லபுரத்திலுள்ள கடற்கறை ஓய்வு வளாகத்தில் 20 நடுத்தர குடில்கள் மேம்பாடு மற்றும் 20 புதிய குடில்களை கட்டுதல் பணிகள் ரூ. 2.20 கோடி செலவில் முடிக்கப்பட்டதுடன், குறைந்த கட்டண 20 குடில்கள் நிலை உயர்த்தப்பட்டன. இக்குடில்கள் மூலம் ஆண்டிற்கு கூடுதல் வருவாய் ரூ.60.00 இலட்சம் ஈட்டப்படும்.
- மதுரை, கன்னியாகுமரி, ஏற்காடு, இராமேசுவரம், கொடைக்கானல் மற்றும் ஒகேனக்கல் ஆகிய இடங்களில் உள்ள விடுதிகள் ரூ. 2.35 கோடியில் மேம்படுத்தப்பட்டது.

- கன்னியாகுமரி பராம்பரிய ஓட்டல் ரூ. 80.00 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டது.
- முட்டுக்காடு படகு குழாம் ரூ.88.00 இலட்சம் செலவில் தரம் உயர்த்தப்பட்டு புதுப்பிக்கப்பட்டது. புதுப்பிக்கப்பட்ட படகு குழாம் சுற்றுலாப்பயணிகளை பெரிதும் கவருகிறது.
- புதிய படகுகள் வாங்குவதற்கு ரூ.90.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் கடந்த ஆண்டு ரூ.5.95 கோடியாக இருந்த வருவாய் 30 விழுக்காடு அதிகரித்து 2008–09 ஆம் ஆண்டில் ரூ.7.74 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## 8. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனியார் பங்கேற்புடன் புதிய வர்த்தக முயற்சிகள்

8.1 தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சென்னை தீவுத்திடலிலும், முதலியார்குப்பம் படகுகுழாமிலும் தனியார் நிறுவனத்துடன் இணைந்து சாகச விளையாட்டுக்கள் நடத்த ஒப்பந்தம் செய்துள்ளது. தீவுத்திடலில் பங்ஜி ஓட்டம், ஜார்பின் பால், மலையேற்றம், பெயின்ட் பால் மற்றும் டிராம்போலின் விளையாட்டுக்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

8.2 அனல்காற்று பலூன் மற்றும் பாராசெயிலிங் விளையாட்டுக்கள் விரைவில் முதலியார்குப்பம் மழைத்துளி படகு குழாமில் தொடங்கப்படவுள்ளது.

- 2009 ஆம் ஆண்டு இந்திய சுற்றுலா அண்ணா நூற்றாண்டு–தொழில் பொருட்காட்சி நிகழ்ச்சி மேலாளர் மூலம் நடத்தப்பட்டது. நிலையான வாடகை ரூ.2.20 கோடியுடன், நுழைவு வாயில் வசூலில் 30 விழுக்காடும் வருமானமாக பெறப்பட்டது.
- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 24 ஓட்டல்கள் மற்றும் 7 உணவகங்களை ஏற்கனவே தனியாருக்கு 10 முதல் 15



ஆண்டுகளுக்கு தனியுரிமை அளித்துள்ளது. இந்த ஓட்டல்கள் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டு சிறப்பாக பராமரிக்கப்படுகின்றன.
- மாமல்லபுரம் கடற்கரை விடுதி வளாகத்தில், புத்துணர்ச்சி மருத்துவ வசதிகள் கொண்ட மூங்கில் குடில்கள் தனியார் கூட்டமைப்புடன் அமைக்கப்பட்டுள்ளது.

## 9. இரயில் மற்றும் சாலை பயணத்திட்டம்

மும்பை, புதுதில்லி மற்றும் கொல்கத்தாவிலிருந்து 2002 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் ஆரம்பிக்கப்பட்ட இரயில் மற்றும் சாலை பயணத்திட்டம், தொடர்ச்சியாக அகமதாபாத் மற்றும் ஜெய்ப்பூர் ஆகிய இடங்களிலிருந்தும் விரிவுபடுத்தப்பட்டது. வசதி செய்யப்பட்ட இரயில் பயணச்சீட்டு, சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தில் வரவேற்பு, உயர் தொழில்நுட்ப பேருந்தில் பயணம், அனுபவமிக்க சுற்றுலா வழிகாட்டி சேவை மற்றும் திருப்பதி கோவில் விரைவு தரிசனம் ஆகியவை இச்சுற்றுலாவின் சிறப்பம்சமாகும்.

இப்பயணத்திட்டம் சுற்றுலாப்பயணிகளின் வரவேற்பை பெற்றுள்ளது. 2007–08 ஆம் ஆண்டில் ரூ.61.00 இலட்சமாக இருந்த வருமானம், 130 விழுக்காடு அதிகரித்து 2008–09 ஆம் ஆண்டில் ரூ.140.00 இலட்சமாக உயர்ந்துள்ளது.

## 10 புதிய முயற்சிகள்

- ஊட்டி, கோயம்புத்தூர் மற்றும் இராமேசுவரத்தில் மதுபான விடுதிகள் ரூ. 72.00 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட உள்ளது.
- ரூ.21.00 இலட்சம் செலவில் ஓட்டல் தமிழ்நாடு, ஒசூரில் 10 குடில்கள் தரம் உயர்த்தப்பட உள்ளது.
- ரூ.35.00 இலட்சம் செலவில் ஓட்டல் தமிழ்நாடு, கிருஷ்ணகிரியில் 16 அறைகள் மேம்படுத்தப்பட உள்ளது.

- ரூ.73.00 இலட்சம் செலவில் ஓட்டல் தமிழ்நாடு, கன்னியாகுமரியில் 12 குடில்கள் மேம்படுத்தப்பட உள்ளது.
- ரூ.32.00 இலட்சம் செலவில் ஓட்டல் தமிழ்நாடு, உதகமண்டலத்தில் 8 குடில்கள் மேம்படுத்தப்பட உள்ளது.
- ரூ.18.00 இலட்சம் செலவில் ஓட்டல் தமிழ்நாடு, திருச்செந்தூரில் 19 அறைகள் மேம்படுத்தப்பட உள்ளது.
- ரூ. 41.00 இலட்சம் செலவில் ஓட்டல் தமிழ்நாடு, இராமேஸ்வரத்தில் 11 அறைகள் மேம்படுத்தப்பட உள்ளது
- ரூ. 56.00 இலட்சம் செலவில் ஓட்டல் தமிழ்நாடு, கோயம்புத்தூரில் 29 அறைகள் மேம்படுத்தப்பட உள்ளது.
- சென்னை தீவுத்திடலில் மன்றோ சாலை அருகில் ரூ. 45.00 இலட்சம் செலவில் பசுமை மகிழ்வுந்து பூங்கா அமைக்கப்பட உள்ளது.

## 11. "எங்கும் ஏறலாம் எங்கும் இறங்கலாம்" சுற்றுலா

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், 18 இருக்கைகள் கொண்ட நான்கு குளிர் சாதன பேருந்துகளை சென்னையிலிருந்து மாமல்லபுரம் வரை **எங்கும் ஏறி, எங்கும் இறங்கும் வசதியுடைய** புதுமையான "**Hop on - Hop off**" சுற்றுலாத்திட்டத்தை தொடங்கியது. இச்சுற்றுலாவில் பங்கு பெறும் பயணிகள் கீழ்காணும் இடங்களை அவரவர் விருப்பத்திற்கு ஏற்ப கண்டு மகிழலாம்.

1) அருள்மிகு மருந்தீஸ்வரர் கோயில், திருவான்மியூர்
2) வி.ஜி.பி தங்க கடற்கரை
3) மாயாஜால்
4) எம்.ஜி.எம்.
5) தட்சணசித்ரா
6) படகு குழாம், முட்டுக்காடு
7) அருள்மிகு நித்திய கல்யாண பெருமாள் கோயில், திருவிடந்தை
8) முதலை பண்ணை
9) கடற்சிங்கம் கண்காட்சி
10) புலிக்குகை



11) கடற்கரை கோயில், மாமல்லபுரம்
12) ஐந்து இரதம்
13) அர்ஜுனன் தபசு

சுற்றுலாப் பயணிகள் தங்கள் விருப்பத்திற்கேற்ப எங்கும் ஏறி, இறங்கி அரை மணி நேர இடைவெளியில் இந்த பயண வசதியை பெறலாம். இச்சுற்றுலாவில் பயணம் செய்யும் பயணிகளுக்கு கட்டணமாக ஒரு நபருக்கு ரூ. 250.00 என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தொடக்க விழா சலுகையாக சுற்றுலாப் பயணிகளுக்கு கட்டணத்தில் 25 விழுக்காடு தள்ளுபடி அளிக்கப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளுக்கு பல்வேறு இடங்களில் 10 விழுக்காடு முதல் 35 விழுக்காடு வரை தள்ளுபடி அளிக்கப்படுகிறது. இப்பயணத்தில், முட்டுக்காடு படகு குழாமில் இலவசமாக படகு சவாரி சென்று வர சலுகை அளிக்கப்படுகிறது.

## 12. சுற்றுலா சேவைகள்

### 12.1 விடுதி மேலாண்மை முறை

முக்கிய விடுதிகளில் விடுதி மேலாண்மை முறை மூலம் ஓட்டல் நடவடிக்கைகள் கணினி மயமாக்கப்பட்டுள்ளது – ஓட்டல் தமிழ்நாடு, மாமல்லபுரம், திருச்சிராப்பள்ளி, மதுரை 1, மதுரை 2, கொடைக்கானல், ஏற்காடு, உதகமண்டலம், கோயம்புத்தூர், இராமேசுவரம், திருச்செந்தூர், தஞ்சாவூர் மற்றும் கன்னியாகுமரி.

### 12.2 பயணத்திட்ட மேலாண்மை முறை

சுற்றுலா வளாகத்திலும் பிற விற்பனை நிலையங்களிலும் பயணத்திட்ட நடவடிக்கைகள் முழுவதுமாக செயற்படுத்த பயணத்திட்ட மேலாண்மை முறை மூலம் கணினி மயமாக்கப்பட்டுள்ளது.

12.3 படகு குழாம்கள் மேலாண்மை முறை

முட்டுக்காடு, கொடைக்கானல், பைகாரா. பிச்சாவரம் மற்றும் ஏற்காடு ஆகிய படகு குழாம்களில் படகுகள் இருக்கும் இடம் குறித்து கணினி மூலம் அறியும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 13. இணையதள மூலம் திட்டங்கள் மேற்பார்வை

www.tourism.tn.nic.in என்ற இணைய தளம் மூலம் திட்டங்கள் இணையதளம் மூலம் நேரடி மேற்பார்வை செய்யும் முறை வகுக்கப்பட்டுள்ளது.

## 14. தமிழில் வலைதளம்

சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக தமிழில் வலைதளம் www.tamilnadutourism.org/tamil அண்மையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 15. உண்மை உணர்த்தும் சுற்றுலா (Virtual Tour)

அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை கவர, தமிழ்நாட்டிலுள்ள முக்கிய சுற்றுலாத்தலங்களை இணைத்து சிறந்த பயணத்திட்டத்தை அறிமுகப்படுத்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் உத்தேசித்துள்ளது. இப்பயணத்திட்டத்தில் இணையதளத்திலும், குறுந்தட்டுகளிலும் சுற்றுலாத்தலத்தை நேரில் காண்கின்ற சிந்தையை சுற்றுலாப் பயணிகள் பெறமுடியும். இத்திட்டத்தால் தமிழ்நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை உயரும்.



## முடிவுரை

சுற்றுலா நமது முயற்சிகளை ஊக்கப்படுத்தும் சக்தி.
சுற்றுலாவிற்கு செலவிடப்பட்ட தொகை முதலீடாகும்.
சுற்றுலா, தேவையற்ற தடைகளைத் தாண்ட உதவுகிறது.
சுற்றுலா, சகோதரத்துவத்தை வளர்த்து நட்பைப் பேணுகிறது.
சுற்றுலா, வேலைவாய்ப்பையும் அறிவையும் வளர்க்கிறது.
சுற்றுலா, விழுமியங்களையும் பண்பையும் பாதுகாக்கிறது.
சுற்றுலா, நினைவுச் சின்னங்களை பாதுகாத்து, வளப்படுத்துகிறது.

தமிழ்நாடு சுற்றுலா எண்ணிலடங்கா அனுபவங்களை அள்ளித் தருகிறது.
சுற்றுலாப்பயணிகளை முன்னிறுத்தி சேவையாற்றுகிறது.
சுற்றுலாப்பயணிகளை மதிப்புடன் நடத்துகிறது.
சுற்றுலாப்பயணிகளுக்கு தமது வீட்டில் இருக்கும் அனுபவத்தைத் தருகிறது.
பல்வகையான அனுபவங்களை அளித்து எல்லா திசைகளிலும் புகழ் பரப்புகிறது.

*சுற்றுலாப்பயணிகள் விருந்தினர்களாக வந்து, வீட்டினராக மாறி, நண்பர்களாக திரும்புகின்றனர்.*
*சுற்றுலாப்பயணிகள் நினைவுகளை உருவாக்க வருகிறார்கள்; பாதுகாக்கப் பிரிகிறார்கள்.*

***என். சுரேஷ்ராஜன்,***
***சுற்றுலா (ம) பதிவுத்துறை அமைச்சர்***

# பிற்சேர்க்கை



## பிற்சேர்க்கை
## தமிழ்நாடு – ஒரு பார்வை

**தமிழ்நாடு – ஒரு பார்வை**

1. புவியியல் அமைவு

வட அட்சரேகை 8° 5' க்கும் 13° 35' க்கும் இடையில் கிழக்கு தீர்க்கரேகை 76° 15' க்கும் 80° 20'க்கும் இடையில் மக்கள்தொகை குறித்த தகவல் (2001 கணக்கெடுப்பின்படி)

| | | |
|---|---|---|
| அ. | பரப்பு (ச.கி. மீ) | 130058 |
| ஆ, | மக்கள் தொகை (எண்ணிக்கை) | 62405679 |
| | பாலின அடிப்படையில், | |
| | ஆண் | 31400909 |
| | பெண் | 31004770 |
| | பரப்பளவின்படி, | |
| | கிராமம் | 34921681 |
| | நகரம் | 27483998 |

2. வெப்பநிலை (2007–2008) ( டிகிரி செல்சியஸ்)

| | | |
|---|---|---|
| அ. | சமவெளிப்பகுதிகள் | |
| | அதிகளவு | 32.79 |
| | குறைந்தளவு | 23.80 |
| ஆ. | மலைவாழிடங்கள் | |
| | அதிகளவு | 19.88 |
| | குறைந்தளவு | 12.11 |
| | மழையளவு (2007–2008) (மி.மீ) | |
| | இயல்பான | 911.6 |
| | உண்மையான | 1164.8 |

3. நீர்ப்பாசனம் (2006–2007)–

| | |
|---|---|
| ஏரிகள் | 531376 |

4. மீன்வளம் (2007–2008) (எண்ணிக்கை)

| | | |
|---|---|---|
| அ. | கடலோரப் பகுதியின் நீளம் (கி.மீ) | 1076 |
| ஆ. | கடலோர மாவட்டங்கள் | 13 |
| இ. | கடலோர தொகுதிகள் (எண்ணிக்கை) | 25 |

5. காடுகள்

வனப்பரப்பு (ச.கி.மீ) (2005–06) 22883.51

| | | |
|---|---|---|
| அ. | காப்புக் காடுகள் | 19444.60 |
| ஆ. | காப்பு நிலங்கள் | 2132.85 |
| இ. | வகைபடுத்தப்படாத காடுகள் | 1306.06 |

6. சாலை மற்றும் போக்குவரத்து

சாலையின் நீளம் (கி.மீ.)

| | |
|---|---|
| தேசிய நெடுஞ்சாலை (2007–08) | 4499.364 |
| மாநில நெடுஞ்சாலை (2007–08) | 56971.000 |
| மாநகராட்சி மற்றும் நகராட்சி சாலைகள் (2006–07) | 7014.000 |
| ஊராட்சி ஒன்றியம் மற்றும் கிராம ஊராட்சி (2007–08) | 99610.000 |
| பேரூராட்சி சாலைகள் (2007–08) | 15592.000 |
| ஏனையவை (வனச்சாலை) (2007–08) | 3511.000 |

இருப்புப்பாதை (கி.மீ.) (2007–08)

| | | |
|---|---|---|
| அ. | இருப்புப்பாதை தடத்தின் நீளம் | 3950.80 |
| | அகல இரயில் பாதை | 2616.09 |
| | மீட்டர் இரயில் பாதை | 1334.71 |
| ஆ. | இருப்புப்பாதை நீளம் | 5911.05 |
| இ. | இரயில் நிலையங்கள் (எண்ணிக்கை) | 541 |
| | அகல இரயில் பாதை | 390 |
| | மீட்டர் இரயில் பாதை | 137 |
| | அகல மற்றும் மீட்டர் இரயில் பாதை | 14 |

| | |
|---|---|
| துறைமுகங்கள் (எண்ணிக்கை) (2007–08) | 18 |
| பெரிய துறைமுகங்கள் | 3 |
| சிறிய துறைமுகங்கள் | 15 |
| விமான நிலையங்கள் (எண்ணிக்கை) (2007–08) | 5 |



7. கல்வி (2007–08) (எண்ணிக்கை)

| | | |
|---|---|---|
| அ. | பல்கலைக்கழகங்கள் | 29 |
| ஆ. | கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 523 |
| இ. | தொழிற்கல்வி கல்லூரிகள் | |
| | 1. மருத்துவம் (2007–08) | |
| | மருத்துவம் | 18 |
| | பல் மருத்துவம் | 23 |
| | துணை மருத்துவம் | 134 |
| | இந்திய மருத்துவ நிறுவனங்கள் | 24 |
| | 2. பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் | 293 |
| | 3. பல்தொழில் நுட்ப கல்லூரிகள் | 252 |
| | 4. வேளாண்மை | 11 |
| | 5. கால்நடை மற்றும் மீன்வளம் | 3 |
| | 6. சட்டக் கல்லூரிகள் | 9 |
| | 7. சிறப்பு கல்விக்கான கல்லூரிகள் (2006–07) | 181 |
| | 8. கல்வியியல் கல்லூரிகள் | 309 |
| | 9. தொழிற்கல்விக்கான பள்ளிகள் | 62 |
| | 10. சிறப்புக் கல்விக்கான பள்ளிகள் | 102 |
| | 11. பிற தொழிற்கல்வி நிறுவனங்கள் | 1236 |
| | 12. பொதுக்கல்விக்கான பள்ளிகள் | 53103 |
| | மேல்நிலைப் பள்ளிகள் | 4736 |
| | உயர்நிலைப் பள்ளிகள் | 5095 |
| | நடுநிலைப் பள்ளிகள் | 8126 |

தொடக்கப் பள்ளிகள் 35146

8. தொலைத்தொடர்பு (எண்ணிக்கை) (2007–08)
உபயோகத்திலுள்ள செல்லிடப்பேசிகள் (பிஎஸ்என்எல் சென்னை தொலைபேசி) 3337087

9. வருவாய் (2007–08) (ரூபாய் கோடியில்)

| | | |
|---|---|---|
| அ. | மதிப்பு கூட்டு வரி | 16473 |
| ஆ. | கேளிக்கை வரி | 16 |
| இ. | நுழைவு வரி | 1125 |

10. வருவாய் நிருவாகம் (2007–08) (எண்ணிக்கை)

| | | |
|---|---|---|
| அ. | வருவாய் மாவட்டங்கள் | 31 |
| ஆ. | வருவாய் வட்டங்கள் | 208 |
| இ. | வருவாய் கிராமங்கள் (டி ஆர் எஸ்–இன்படி) | 17292 |

11. உள்ளாட்சி மன்றங்கள் (2007–2008) (எண்ணிக்கை)

| | | |
|---|---|---|
| அ. | மாநகராட்சிகள் | 8 |
| ஆ. | நகராட்சிகள் | 150 |
| இ. | ஊராட்சி ஒன்றியங்கள் | 385 |
| ஈ. | பேரூராட்சிகள் | 561 |
| | சுற்றுலா தொடர்பானவை | 102 |
| | இன்றியமையாதவை | 78 |
| உ. | மாவட்ட ஊராட்சிகள் | 29 |
| ஊ. | கிராம ஊராட்சிகள் | 12618 |

12. சமூக வளர்ச்சி (2007–08) (எண்ணிக்கை)

| | | |
|---|---|---|
| அ. | ஏற்படுத்தப்பட்ட சுயஉதவி குழுக்கள் | 19061 |

13. காவல் மற்றும் சிறைகள் (2007) (எண்ணிக்கை)

| | | |
|---|---|---|
| அ. | அனுமதிக்கப்பட்ட காவல் படை | 102421 |
| | காவல் நிலைய விவரம் | |
| ஆ. | காவல் நிலையங்கள் | 1256 |
| இ. | அனைத்துமகளிர் காவல் நிலையங்கள் | 196 |
| ஈ. | புறக்காவல் நிலையங்கள் | 94 |

14. சட்டமன்றப் பேரவை (2006) (எண்ணிக்கை)

சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்கள் (2006)

| | | |
|---|---|---|
| அ. | தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் | 234 |
| ஆ. | நியமன உறுப்பினர்கள் (ஆங்கிலோ–இந்திய உறுப்பினர்) | 1 |

நாடாளுமன்ற உறுப்பினர்கள்

| | |
|---|---|
| மக்களவை (2004) | 39 |
| மாநிலங்களவை | 18 |

(அரசு நாட்குறிப்பு 2009)

## தமிழ்நாடு சுற்றுலா – ஓர் கண்ணோட்டம்

| | | | |
|---|---|---|---|
| 1. | சுற்றுலா அலுவலகங்கள் ( தமிழ்நாட்டில் – 18, வெளி மாநிலங்களில் – 6) | : | 24 |
| 2. | சுற்றுலா தகவல் மையங்கள் (தமிழ்நாட்டில் – 18, வெளி மாநிலங்களில் – 6) | : | 24 |
| 3. | உலக பாரம்பரிய சின்னங்கள் | : | 5 |
| 4. | மாநில தொல்பொருள் துறையினால் பராமரிக்கப்படும் சின்னங்கள் | : | 85 |
| 5 | மைய அரசு தொல்பொருள் துறையினால் பராமரிக்கப்படும் சின்னங்கள் | : | 247 |
| 6. | கோட்டைகள் | : | 11 |
| 7. | அருங்காட்சியகங்கள் | : | 14 |
| 8. | இந்துசமய அறநிலையத் துறையினால் பராமரிக்கப்படும் கோவில்கள் | : | 38436 |
| 9. | பெரிய துறைமுகம் | : | 3 |
| 10. | பெரிய மலைவாசஸ்தலங்கள் | : | 3 |
| 11. | இரண்டவாது நீளமான கடற்கரை | : | மெரினா (சென்னை) 13 கி.மீ. |
| 12. | தமிழ்நாட்டின் உயரமான மலைச் சிகரம் | : | தொட்டபெட்டா (2636 மீட்டர்) |
| 13. | பன்னாட்டு விமான நிலையங்கள் | : | 3 |
| 14. | தமிழ்நாட்டில் உள்ள மொத்த ரயில் பாதை | : | 3941 கி.மீ. |
| 15. | மொத்த இளைஞர் விடுதிகள் | : | 7 |
| 16. | தமிழ்நாட்டில் உள்ள மொத்த ஓட்டல்கள் | : | 53 |
| 17. | மொத்த படகு இல்லங்கள் | : | 8 |
| 18. | மொத்த பேருந்துகள் | : | 20 |
| 19. | மொத்த தொலைநோக்கு இல்லங்கள் | : | 3 |
| 20. | பொழுதுபோக்கு பூங்காக்கள் | : | 23 |



## சுற்றுலாவின் வகைகள்

1. பொழுதுபோக்குச் சுற்றுலா
2. ஆன்மிகச் சுற்றுலா
3. பாரம்பரியச் சுற்றுலா
4. சாகசச் சுற்றுலா
5. கப்பல் சுற்றுலா
6. ஊரகச் சுற்றுலா
7. பொறுப்புணர்வு சுற்றுலா
8. வணிகச் சுற்றுலா
9. மருத்துவச் சுற்றுலா
10. சுற்றுச் சூழல் சுற்றுலா
11. பண்பாட்டுச் சுற்றுலா
12. கல்விச் சுற்றுலா
13. விளையாட்டுச் சுற்றுலா

**சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் சுற்றுலா தகவல் மையங்கள்**

**<u>தமிழ்நாட்டில் செயல்படுபவை</u>**

**சுற்றுலா அலுவலகங்கள்**

1) சென்னை
2) கன்னியாகுமரி
3) உதகமண்டலம்
4) கொடைக்கானல்
5) மாமல்லபுரம்
6) மதுரை
7) இராமேசுவரம்
8) தஞ்சாவூர்
9) திருச்சிராப்பள்ளி
10) திருநெல்வேலி
11) சேலம்
12) தருமபுரி
13) சிதம்பரம்
14) பூம்புகார்
15) வேலூர்
16) கோயம்புத்தூர்
17) காரைக்குடி
18) திருவண்ணாமலை

**சுற்றுலாத் தகவல் மையங்கள்**

**<u>விமான நிலையங்கள்</u>**

1) சென்னை ( பன்னாட்டு விமான நிலையம்)
2) சென்னை ( உள்நாட்டு விமான நிலையம்)
3) மதுரை
4) கோயம்புத்தூர்



5) திருச்சிராப்பள்ளி

**<u>இரயில் நிலையங்கள்</u>**

6) சென்னை (சென்ட்ரல்)
7) சென்னை (எழும்பூர்)
8) மதுரை
9) கோயம்புத்தூர்
10) இராமேசுவரம்
11) திருச்சிராப்பள்ளி
12) திருநெல்வேலி

**<u>பேருந்து நிலையங்கள்</u>**

13) புறநகர் பேருந்து நிலையம், கோயம்பேடு
14) இராமேசுவரம்

**<u>பிற இடங்கள்</u>**

15) கூடலூர் ( நீலகிரி மாவட்டம்)
16) தரங்கம்பாடி ( நாகப்பட்டினம் மாவட்டம் )
17) ஓட்டல் தமிழ்நாடு வளாகம், தஞ்சாவூர் (தஞ்சாவூர் மாவட்டம்)
18) பாஞ்சாலங்குறிச்சி ( தூத்துக்குடி மாவட்டம்)

**<u>பிறமாநிலங்களில் செயல்படுபவை</u>**

**சுற்றுலா அலுவலகங்கள்**

1) புது தில்லி
2) மும்பை
3) கொல்கத்தா

4) பனாஜி ( கோவா)
5) ஜெய்ப்பூர்
6) ஆக்ரா

**சுற்றுலாத் தகவல் மையங்கள்**

| | **இடம்** | **மாநிலம்** |
|---|---|---|
| 1) | இரயில் நிலையம், பெங்களூர் | கர்நாடகா |
| 2) | ஐதராபாத் | ஆந்திரப்பிரதேசம் |
| 3) | திருவனந்தபுரம் | கேரளா |
| 4) | அகமதாபாத் | குஜராத் |
| 5) | புவனேசுவரம் | ஒரிசா |
| 6) | லக்னோ | உத்தரப்பிரதேசம் |



**அதிக பிரபலமாகாத சுற்றுலாத் தலங்கள்**

| **வ.எண்.** | **அதிக பிரபலமாகாத சுற்றுலாத் தலங்கள்** | **மாவட்டம்** |
|---|---|---|
| 1<br>2 | பெரியபாளையம்<br>பழவேற்காடு | திருவள்ளூர் |
| 3 | ஏலகிரி | வேலூர் |
| 4<br>5<br>6<br>7 | திருக்கடையூர்<br>வேதாரண்யம்<br>தரங்கம்பாடி<br>திருமணஞ்சேரி | நாகப்பட்டினம் |
| 8 | சித்தன்னவாசல் | புதுக்கோட்டை |
| 9 | புளியஞ்சோலை | பெரம்பலூர் |
| 10 | தாரமங்கலம் | சேலம் |
| 11 | கொல்லிமலை | நாமக்கல் |
| 12 | ஒகேனக்கல் | தர்மபுரி |
| 13 | பவானிகூடுதுறை | ஈரோடு |
| 14 | வால்பாறை | கோயம்புத்தூர் |
| 15 | மேகமலை | தேனி |
| 16 | சிறுமலை | திண்டுக்கல் |
| 17 | திருப்புடைமருதூர் | திருநெல்வேலி |
| 18 | திற்பரப்பு | கன்னியாகுமரி |

## புராதன நகரங்கள்

| வ.எண். | புராதன நகரம் | மாவட்டம் |
|---|---|---|
| 1.<br>2.<br>3. | காஞ்சிபுரம்<br>மாமல்லபுரம்<br>ஸ்ரீபெரும்புதூர் | காஞ்சிபுரம் |
| 4.<br>5.<br>6.<br>7.<br>8.<br>9. | சிதம்பரம்<br>பிச்சாவரம்<br>மருதூர்<br>குறிஞ்சிபாடி<br>மரக்காணம்<br>திருவந்திபுரம் | கடலூர் |
| 10.<br>11.<br>12. | ராமேசுவரம்<br>வாலிநோக்கம்<br>சேதுக்கரை | இராமநாதபுரம் |
| 13. | ஸ்ரீரங்கம் | திருச்சிராப்பள்ளி |
| 14. | ஸ்ரீவில்லிபுத்தூர் | விருதுநகர் |
| 15.<br>16. | தஞ்சாவூர்<br>கும்பகோணம் | தஞ்சாவூர் |
| 17. | கங்கைகொண்டசோழபுரம் | பெரம்பலூர் |
| 18. | மதுரை | மதுரை |
| 19. | பழனி | திண்டுக்கல் |
| 20. | திருச்செந்தூர் | தூத்துக்குடி |
| 21.<br>22. | திருத்தணி<br>திருவள்ளூர் நகரம் | திருவள்ளூர் |
| 23.<br>24.<br>25. | கன்னியாகுமரி<br>பத்மநாபபுரம்<br>குளச்சல் | கன்னியாகுமரி |
| 26. | திருவண்ணாமலை | திருவண்ணாமலை |
| 27.<br>28.<br>29. | செஞ்சி<br>பரிக்கல்<br>திருவக்கரை | விழுப்புரம் |
| 30.<br>31.<br>32. | செட்டிநாடு<br>காரைக்குடி<br>இடைக்காட்டூர் | சிவகங்கை |



| | | |
|---|---|---|
| 33.<br>34. | பிள்ளையார்பட்டி<br>காளையார்கோயில் | |
| 35.<br>36. | நவதிருப்பதிகள்<br>அ) திருக்காலூர்<br>ஆ) குரும்பூர் – மணப்பாடு | தூத்துகுடி |
| 37.<br>38.<br>39.<br>40. | தரங்கம்பாடி<br>பூம்புகார்<br>நாகூர்<br>வேளாங்கண்ணி | நாகப்பட்டினம் |
| 41.<br>42. | குற்றாலம்<br>திருநெல்வேலி | திருநெல்வேலி |
| 43. | திருச்செங்கோடு | நாமக்கல் |
| 44. | பேரூரு | கோயம்புத்தூர் |
| 45. | பவானி | ஈரோடு |
| 46.<br>47.<br>48. | சித்தன்னவாசல்<br>ஆவுடையார்கோயில்<br>திருமயம் | புதுக்கோட்டை |

## தமிழ்நாட்டிற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகள் விபரம்

| வ. எண் | வருடம் | உள் நாட்டினர் (இலட்–சத்தில்) | வளர்ச்சி விகிதம் | வெளி நாட்டினர் (இலட்–சத்தில்) | வளர்ச்சி விகிதம் | மொத்தம் (இலட்–சத்தில்) | வளர்ச்சி விகிதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2002 | 246.61 | 3.6 | 8.05 | 4.1 | 254.66 | 3.6 |
| 2 | 2003 | 270.59 | 9.7 | 9.02 | 12 | 279.61 | 9.8 |
| 3 | 2004 | 300.77 | 11.2 | 10.58 | 17.3 | 311.35 | 11.4 |
| 4 | 2005 | 323.39 | 7.5 | 11.79 | 11.4 | 335.18 | 7.7 |
| 5 | 2006 | 392.14 | 21.3 | 13.35 | 13.2 | 405.50 | 21.0 |
| 6 | 2007 | 506.47 | 28.2 | 17.53 | 31.3 | 524.00 | 29.2 |
| 7 | 2008 | 626.18 | 23.6 | 20.40 | 16.4 | 646.58 | 23.4 |